# தென்மொழி



சுவடி : 17

ஓலை : 10

ஆசிரியர்

## பெருஞ்சித்திரனார்

விலை

உருபா: 1-2

www.thamizham.net - Free E book No 7510

# நமக்கு வந்த மடல்கள்

**0 : 841 :** பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். பாவாணர் மறைவு மொழியுலகத்தில் நிரப்ப இயலாதவொரு வெற்றிடத்தை, வெறுமையை ஏற்படுத்தி விட்டது. இவ்வுண்மையை மொழி புரக்கும் முனைப்புடையோரும் மொழிப் பற்றுளருமே உணர்வர். 'அம்மொழியறிஞரை இழந்த தமிழன்னை விழியிழந்தவள் போலும்' வெந்துயர் கொள்கிறாள். பாவாணரை இழந்த தமிழரோ அவரது இழப்பைப் பத்தோடு பதினொன்றாக எண்ணும் பெரும் போக்கினராயும் பேதையராயும் தோன்றுகின்றனர்.

மொழியுணர்வு துளியுமில்லாத இற்றைத் தமிழக் குமுகாயம் தரங்கெட்ட, ஆர்ப்பாட்ட வெறியுணர்வுகளால் ஆட்கொள்ளப் பெற்று அலமருகின்றது; அடிமையும் மிடிமையும் பூண அவாவுகின்றது. தமிழையும் தமிழினத்தையும் இழித்தும் பழித்தும் உரைத்து வருவதோடு அழித்து விடுவதாக ஆர்ப்பரிக்கும் வந்தேறிகளின் கூட்டம் தூளுரைத்துத் தோளுயர்த்தி எழுந்த பின்னரும், நம்மவர் ஊமைகளாய் ஒடுங்கியும் ஆமைகளாய் அடங்கியும், பதவி பட்டங்களுக்காக அங்காந்தும் பகைவர்களை அடிவருடியும் திரியும் இழிநிலையை என்னென்பது! ஆரியக் குறும்பர்களின் வரம்புமீறிய திருவிளையாடல்கள், நாடெங்கும் முளைத்துக் கிளைத்துச் செழிப்பதற்குத் தமிழரே தகுந்த எருவாயும் நீராயும் பயன்பட்டு வருவதை எண்ணுங்கால் நெஞ்சம் எரிமலையாய்க் குமுறுகிறது; நிலைகுலைந்து தவிக்கிறது. மறைமலையடிகள், திரு. வி. க, பாவேந்தர், பாவாணர் போன்றோரின் மொழித் தொண்டும், தந்தை பெரியார் அறிஞர், அண்ணா போன்றோரின் தமிழினத் தொண்டும் விழலுக்கிறைத்த நீராக வீணாயின போலும்! இவற்றையெல்லாம் எங்கே எவரிடம் எவ்வாறு உரைப்பது? கொள்கை நெறியாலும் அழுத்தமான உணர்வுகளாலும் ஒன்றுபட்டு ஆங்காங்கு சிதறுண்டும் தொடர்பின்றியும் வதியும் தனித்தமிழ் அன்பர்களை, ஓரணியில் திரட்டிடத் தென்மொழி இயக்கம் முன்வர வேண்டும். பேச்சும் மூச்சும், உள்ளமும் உணர்வும் தமிழாக இருப்போரை ஒன்றுகூட்டிப் புதிய வரலாற்றைப் படைக்கும் போர்ப்பாசறையாகத் தென்மொழி இயக்கம் மலர வேண்டும்; மறு மலர்ச்சியை உருவாக்க வேண்டும்.

— கடவூர். மணிமாறன், க. மூ. கிருட்டிணராயபுரம், (திருச்சி)

**0 : 842 :** அருந்தமிழ் அறிஞ! வணக்கம். பல ஆண்டுகளாகத் தாங்களும் மற்ற பல தமிழ்ப் பேரறிஞர்களும் நற்றமிழைப் பயன்படுத்தி வரும்படி எடுத்துக் கூறிவந்தும், சற்றும் சிந்திக்காமல் கையும் மனமும் போன போக்கிலே எழுதியும் பேசியும் தமிழைக் கெடுத்தும் தமிழ்நெஞ்சங்களைப் புண்படுத்தியும் வருகின்ற புன்மை எழுத்தாளர்களைக் கயமைத் தனம் நிறைந்த பல 'கண்ணிய' மான தமிழ் ஏட்டாளர்கள் போற்றிக் காப்பாற்றி வருகின்றனர். அவர்களது கருத்து, இக்கால மக்கள், குறிப்பாக இளையோர் 'இவற்றைத்

(தொடர்ச்சி அட்டை 3 ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7510

# கோவை சிறையில் பாவலரேறு!



(17 5 81 - முதல்..... )

தமிழினத்தை முழுக்க முழுக்க இழிவுபடுத்தி, தமிழனை என்றும் தம் அடிமையாக வைத்திருக்க பார்ப்பன வல்ஓநாய்களினுல் இயற்றப்பட்ட மனு (அ) தர்ம நூலுக்கு, 17-5-81-அன்று தமிழகமெங்கும் தீ வைத்துப் போராட்டம் நடத்தத் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். அதன்படி தமிழகமெங்கும் பல்லாயிரக் கணக்கான உண்மைத் தமிழர்கள் அந்நூலின் கொடுமையை உணர்ந்து அதற்குத் தீ வைக்கையில் தளைப்படுத்தப்பட்டனர், பலர் அன்று மாலையே விடுவிக்கப்பெற்றனர்.

www.thamizham.net - Free E book No 7510

ஈரோட்டில் தீ வைப்புப் போரில் கலந்து கொண்ட பாவலரேறு
ருஞ்சித்திரனார் தளைப்படுத்தப்பட்டார். ஆசிரியருடன் புலவர்
றக்குருவனா, குமர நடவரச ஈவப்பனார், பாவை. நடவரசன்,
மிழ்க் குமரன், கண்ணன் ஆகிய தென்மொழி வினையாளர்களும்
ற்றும் பதினெட்டுத் திராவிடர் கழக உறுப்பினர்களும் தளைப்
டுத்தப்பட்ட அன்று முழுவதும் ஆசிரியரும், பிறரும் காவல் நிலை
த்தில் வைக்கப் பெற்று, உணவு கொடுக்கப் படாமல் தொல்லைப்
டுத்தப்பட்டுள்ளனர். திராவிடர் கழக அன்பர்களும் தென்மொழி
ன்பர்களும் வெளியிலிருந்து உணவு வாங்கிக்கொண்டு வந்து தருவ
ாகக் கூறியும், ஐயா அவர்கள் அதனை மறுத்து, கடமை தவறிய
ாவலர்களுக்காக நாம் உறுதிகுலைந்து உண்ணக் கூடாது என
றுதியாகக் கூறிவிட்டார். காவல்துறை மூடுந்தில் மிகுதியாக
டைத்துக் கொண்டு செல்வதைத் தவிர்த்து அனைவரும் வழக்கு
ன்றத்திற்கு நடந்தே சென்றனர். தீர்ப்பாளரிடம் பெருமிதமாக
யா அனைத்தையும் விளக்கிக் கூறினார். வழக்கு மன்ற ஆணைப்
டி 15-நாள் காவலில் வைக்கும்படி கூறப் பெற்றது. ஐயாவும்,
அன்பர்களும் கோவை நடுவண் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆங்காங்குள்ள தமிழன்பர்கள் — இந் நிலையை உணர்ந்து, நம்
இன அடிமை நிலையினின்று விடிவு பெற ஆவன செய்யக் கேட்டுக்
கொள்கிறோம்.

www.thamizham.net - Free E book No 7510

கெஞ்சுவதில்லை பிறர்பால்;
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர் நின்றே!




சுவடி: 17 ஓலை: 10

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]

விடை. தி. பி. ௨௦௧௨-

மே-சூன்-'81.

# தென்மொழி

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்

புரப்பாசிரியர்கள்:

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)

தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)

தென்மொழி. ந. முத்துக்குமரனார் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்

அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)


# 'இந்து' மதத்தினின்று தமிழர்கள் ஒட்டுமொத்தமாக வெளியேற வேண்டும்!



மக்களை அடையாளம் காட்டுவதற்குரிய குறிப்புப் பெயர்களுள் மதமும் சாதியும், நாட்டுக்கு அடுத்தபடி மிகவும் முகாமை பெற்றனவாகக் கருதப் பெறுகின்றன. விரும்பியோ விரும்பாமலோ, ஒருவர் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவராகவே இருத்தல் வேண்டும் என்பது அண்மைக்காலம்வரை கடைப்பிடிக்கப் பெற்று வந்த அல்லது வரும் ஒரு நடைமுறை. இம் முறை, மக்கள் மதங்களுக்குத் தங்களை அடிமையாக்கிக் கொண்ட காலந்தொட்டு இன்று வரை பின்பற்றப்பட்டு வருகிறது. ஒருவனை அவன் பிறந்த நாடு, பெற்றோர்கள், வைத்துக் கொண்ட பெயர், உயரம், எடை, உறுப்பு அமைவுகள் முதலியவற்றால் மட்டுமே சரியாக அடையாளம் கண்டு கொள்ள முடிவதாக இருந்தாலும், அவன் கடைப்பிடித்தொழுகுகின்ற மதத்தையும், அவன் பிறந்துள்ள குலம் அல்லது சாதியையும் அடை

www.thamizham.net - Free E book No 7510

யாளம் கூறியாக வேண்டும் என்பது, மத ஆளுமைக்காரர்கள் அல்லது மதத் தலைவர்கள் ஏற்படுத்திவைத்த ஒரு தேவையற்ற மூடக் கொள்கையாகும். குழுஇன ஆட்சிக்காலத்தில்,தங்கள் இனத்தவர்களே வலுப்பெற வேண்டும், பிற இனத்தவர்கள் தம்மிடையில் ஊடுருவி விடக் கூடாது என்ற நினைவுடன், குல, இன அடையாளங்களும், மத ஆட்சிக் காலத்தில் தங்கள் மதத்தவர்களே பெருகி வளர வேண்டும், பிற மதத்தவர்கள் வலிவு பெற்றுவிடக் கூடாது என்ற எண்ணத் துடன் மத அடையாளங்களும் கடைப்பிடிக்கப் பெற்றிருக்க வேண்டும். எப்படியும் இவ் வழக்கம் ஒரு காட்டு விலங்காண்டிக் **(Barbarian)** கால வழக்கமே!

இக்காலம் அறிவியல் வளர்ந்து செழித்து வரும் காலம்; மக்கள் மூடக் கொள்கைகள் தவிர்த்துப் பகுத்தறிவைக் கடைப்பிடித்து வரும் காலம்; குடியரசு மலர்ந்து வளர்ச்சி பெற்று வரும் காலம். ஆயினும், இக்காலத்திலும் ஒருவனை அடையாளம் காட்டுதற்குப் பழையமுறைப் படியே சாதியும் மதமும் தேவைப்படுவனவாக இருப்பது, மத வெறி யர்கள் இன்னும் ஆண்டு கொண்டிருப்பதாலும், ஆட்சிவலுப் பெற்றி ருப்பதாலுமே ஆகும். இந்தியாவைப் பொறுத்த மட்டில், இங்குள்ள வர்கள் எத்தனை அறிவியலுணர்ச்சி பெற்றவர்களாக இருந்தாலும், இவர்களுக்கு இயல்பாகவே உள்ள மதவெறி காரணமாக, இத்தகைய மூட நம்பிக்கைகள் எளிதில் கைவிடப்பட்டுவிடும் என்று சொல் வதற்கில்லை. மதவுணர்ச்சியும் சாதியுணர்ச்சியும் இந்திய மதவெறி யர்களின் அரத்த நாளங்களிலிருந்து அவ்வளவு எளிதில் சுண்டிப் போய் விடும் என்று எதிர்பார்க்க முடியாது. இன்னும் ஆயிரம் ஆண்டுகளானாலும் இந்திய அரசியல் தலைவர்கள் மதவெறியர்களாகத் தான் இருப்பார்கள்; அல்லது மதவெறி பிடித்த மதக்குருமார்களின் ஆட்டுவிப்புக்கு ஆடுகின்ற அறிவியல் தெளிவற்ற மரப்பாவைகளா கத்தான் இருக்க முடியும். அந்த அளவுக்கு இங்குள்ள 'இந்து மதம்' அவர்கள் மூளைத்திரளைகளை அடக்கி ஆட்சி புரிந்து கொண்டிருக்-கின்றது. இந்து மதமும், அதற்கடிப்படையான வேதங்கள், மிருதி களும் (மனு நூல் போன்றவை) என்ன சொல்கின்றனவோ அவைதாம், 'தர்மம்' (நெறி, கடைப்பிடி) (மனு 12-106) என்றும், வேதமறிந்த 'பிராமணன்' சொல்லுவதைத் தவிர, வேதமறியாத பத்தாயிரம் பேர் கூடிச் சொன்னாலும் அது தர்மம்' ஆகாது (மனு 12-113) என்றும், வழி வழியாகவே, அவர்களுக்கு மதவெறிசான்ற மூட நம்பிக்கை கற்பிக்கப்பட்டு வந்திருக்கின்றது. எனவே, இந்தியாவைப் பொறுத்தமட்டில் அரசியல், அறவியல், பொருளியல், குமுகாயவியல் கல்வி, பண்பாடு, ஒழுக்கம், பொழுதுபோக்கு முதலிய அனைத்துத் துறைகளிலும் 'மதம்' குறிப்பாக 'இந்து மதம்' தன் வலிந்த, கொடிய, நச்சுத் தன்மை கொண்ட சிறகுகளைப் போர்த்திக் கொண்டிருப்பதை எவ்வளவு பெரிய அறிவாளியாலும் மறுத்துவிட முடியாது.

www.thamizham.net - Free E book No 7510

இனி, 'இந்து மதம்' என்பது என்ன? அது முழுக்க முழுக்க ஆரியப் பார்ப்பனரின் நன்மைக்காகவே, ஆரியப் பார்ப்பனரால் ஏற்படுத்தப்பட்டு, இன்றுவரை அவர்களின் வாழ்க்கைக்காக, அவர்களின் நலன்களுக்காக, மற்ற, பிற இன மக்களைக் கொஞ்சமும் இரக்கமின்றி ஆட்டிப் படைத்துக் கொண்டும், கசக்கிப் பிழிந்து வேலைவாங்கிக் கொண்டும் வரும், கொடிய மூடநம்பிக்கை கொண்ட ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பு ஏற்கனவே இங்கிருந்த மக்களமைப்புகளையும் அவர்களின் கோட்பாடுகளையும் அழித்து உருமாற்றித் தன் அகன்ற நச்சு வாய்க்குள் இட்டு விழுங்கிச் செரித்து, அவற்றின் குருதிகளாலும் சாரங்களாலும் தன் உருவத்தைப் புதிய புதிய கவர்ச்சியாலும், காரணங்களாலும், மெருகேற்றி மிக மிக வலிவும் பொலிவும் பெற்று விளங்குகிறது. இந்து மதத்தின் கால்கள் வேதங்களில் ஊன்றியிருக்கின்றன. இதன் கைகள் மனு முதலிய பல மிருதிகளாக (நெறி நூல்களாக) விரிந்திருக்கின்றன. இதன் உடல் பல நூறு புராணங்களாகவும், இதிகாசங்களாகவும் பூதம் போல் பெருத்து வளர்ந்திருக்கின்றன. இதன் நச்சுப் பற்கள் இந்தியச் சட்டங்களாகவும், மதவியல் கோட்பாடுகளாகவும் உருப் பெற்றிருக்கின்றன. இதன் ஆர்ப்பாட்ட ஓலங்கள் நூற்றுக்கணக்கான விழா வேடிக்கைகளாக மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்டுள்ளன. இதன் நச்சுத்தன்மை பொருந்திய கவர்ச்சியான பார்வையால் மக்கள் தம் மூளைத்திரட்சிகள் உருகி நீற்றுப்போயிருக்கின்றன. எனவே, அவர்கள் இந்த இந்து சமயப் பிடியிலிருந்து தங்களை அவ்வளவு எளிதில் விடுவித்துக் கொள்ளுவதென்பது இயலாததொன்றாகவே ஆக்கப்பட்டிருக்கின்றது. இப் பிடிக்குள் அடங்காத அரசர்கள் இல்லை; இதன் கொடுமைக்கு உட்படாத மக்கள் இல்லை; இதன் கவர்ச்சி அழகில் மயங்காத மக்களினத் தலைவர்கள் இல்லை; அறிவாளிகள், வழிகாட்டிகள், பாடலாசிரியர்கள் ஒருவரும் இல்லை. இதன் பிடியிலிருந்து வெளியேறிய அத்தனைப்பேரும் அவர்கள் எவ்வளவு பெரிய அறிஞர்களாக இருந்தாலும், மக்களினத் தலைவர்களாக இருந்தாலும், வீரர்களாக இருந்தாலும், அவர்கள் 'நாத்திகர்கள்', 'அரக்கர்கள்', 'கொடியவர்கள்', 'மக்கட்பகைவர்கள்' என்றுதாம் கூறப்பெற்று, அக்கால் உள்ள மதத்தலைவர்களால் அங்கேயே அழிக்கப்பட்டுள்ளார்கள்.

**இப்படிப்பட்ட இந்து மதத்தை ஒழுக்கங் கெட்ட, குடிவெறி நிறைந்த மூடர்களைத் தவிர வேறு எவரும் 'அர்த்த' முள்ளது என்று சொல்ல மாட்டார்கள்.** அப்படி அவர்கள் சொல்வார்களானால் அதற்கு ஏதோ 'அர்த்தம்' இருக்க வேண்டும்! எனவே அந்த மதத்தைப் போற்றுபவர்களைப் பற்றியோ அதுதான் உயர்ந்தது, சிறந்தது, மெய்யானது, உயிரானது, அழிவற்றது (அநாதி), தோற்றமும் முடிவுமற்றது (ஆதியந்தம் இல்லாதது) என்று சொல்பவர்களைப் பற்றியோ நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அப்படிப்

www.thamizham.net - Free E book No 7510

பட்டவர்கள், ஒன்றால், அந்த மதத்தால் தொடர்ந்து நன்மைகளையும் பெற்றுக் கொண்டு வரும் பார்ப்பனர்களாக இருத்தல் வேண்டும்; அன்றால், அத்தகைய பார்ப்பனர்களால் தாங்களும் ஏதோ சில நன்மைகளைப் பெற்று வரும் 'விடண', 'சுக்கிரீவ' 'பிரகலாத', 'பக்த வத்சல', 'சுப்பிரமண்ய', 'சிவஞான', 'கண்ணதாச', 'அடியார்'களாக இருத்தல் வேண்டும். இந்த இருவகையரான ஏமாற்றுக் கூட்டத்தினரைத் தவிர, இந்து மதம், புனிதமானது, உயர்ந்தது, சிறந்தது, 'அர்த்த'முள்ளது என்று அறிவுள்ள, தன்மானமுள்ள வேறு எவருமே சொல்ல மாட்டார்கள்.

**மேலும் இவ் விருபதாம் நூற்றாண்டு அறிவியல் வளர்ச்சிக் காலத்தில், எந்த ஒருதனிப்பட்ட மாந்தனுக்கும், 'மதம்' என்னும் ஓர் இனவுறுப்பு தேவையே இல்லை** அதுவும் மிக மிக அருவருப்பானதும், உலகிலுள்ள மதங்கள் அனைத்தையும் விட மிகவும் இழிவானதுமான 'இந்து' மதமும் அது பெற்ற 'சாதியமைப்பு' என்னும் கேடான ஒரு தீய அமைப்பும், இங்குள்ள எவர்க்கும் தேவையற்றவையே! இவை இல்லாமற் போனால் வாழ்க்கையில் என்ன கெடுதி ஏற்பட்டுவிடும் என்று அறிவியலடிப்படையில் எவரேனும் கூறி, மெய்ப்பித்துக் காட்ட முடியுமா? 'மதம்' என்னும் அமைப்பு இல்லாவிட்டால் மக்களுக்கு எதில் இழப்பு ஏற்பட்டு விடும்? எந்த உறுப்பு ஒட்டையாகி விடும்? அப்படியே, எவருக்காகிலும் எந்த உறுப்பாவது ஒட்டையாகும் என்றால், அந்த ஒட்டையை அடைத்துக் கொள்ள வேண்டிய அவர்கள் வேண்டுமானால் அதைத் தனிப்பட்ட முறையில் அவர்கள் வீட்டிலோ, அல்லது பெட்டியிலோ, அல்லது சட்டைப் பையிலோ வைத்துக்கொண்டு பாராட்டிக் கொண்டிருக்க வேண்டியது தானே! அவர்களின் ஒட்டைக்காக, அதை ஏன் மற்றவர்கள் தலையிலும் சுமத்த வேண்டும்? பேய்க் கனவு கண்டு அலறுகிறவன், எதற்கு ஊரிலுள்ள அத்தனைப் பேர்களையும் தன் வீட்டில் வந்து படுத்துக் கொள்ளுங்கள் என்று கூற வேண்டும்? இனி, அலறுகிறவன் ஆட்சியில் உள்ளவனாக இருந்தால் அதற்குச் சட்டமல்லவா போடுவான்? அஃது எப்படி அறிவுடைமையும், தனிமாந்தவுரிமைக்கு ஊறு விளைவிக்காததும் ஆகும்.

இனி, மாந்தமனத்தின் மேம்பட்டான மீமிசை வளர்ச்சிக்கும், இறைமையுணர்ச்சிக்கும் 'மதம்' இன்றியமையாதது என்பதாக மதத் தொடர்பான அறிஞர்கள் சிலர் கருதுகிறார்கள். மீமிசை மாந்த வளர்ச்சியென்பது இறைமையுணர்வு ஒன்றுதான் என்று நினைத்து விடக் கூடாது. பொதுமாந்த வுணர்வும் இறைமையுணர்வின்பாற் பட்டதுதான். இறைவன் என்பவன் இப்புடவியில் எங்கேயோ ஓரிடத்தில் இருந்து கொண்டு, மாந்தவுயிர்கள் உட்பட எல்லா உயிரினங்கள், உயிரல்லினங்கள் அனைத்தையும் ஆட்டுவிக்கின்றான் என்பது அறிவியலுக்கோ மெய்யறிவியலுக்கோ கூட பொருந்துவதன்று.

www.thamizham.net - Free E book No 7510

இவ்வுலகும், இவ்வுலகுஞ்சார்ந்த புடவியின் அனைத்துப் பொருள்களும் வலிந்த ஒரு பேராற்றலால் இயக்கப் பெறுகின்றது என்பது ஓர் உண்மையே! ஆனால் அப் பேராற்றல் மாந்த வடிவமோ வேறெந்த வடிவமோ கொண்டதாக இருத்தல் முடியாது. அதன வேறுபல கூறுகளும் தன்மைகளும் அனைவர்க்குமே பொதுவான ஆற்றலுணர்வு-களை அடிப்படையாகக் கொண்டனவாகவே இருத்தல் வேண்டும். அப்பேராற்றல் இங்குள்ள மதம் என்னும் ஒரு மாந்த அமைப்புக்குக் கட்டுப் பட்டுத்தான் இயங்குகின்றது என்பது மெய்யான கோட்பாடு அன்று. மதம் என்பது முற்றிலும் மாந்த அமைப்பே. மாந்தன் என்பவன் உலகியலுணர்வு சான்றவனே. எனவே, அவன் வகுக்கும் எத்தகைய நெறிமுறைகளானாலும் அவை அனைத்து மக்களுக்குமே பொதுவானவையாக அமைந்துவிட முடியாது. மதமும் இத்தகைய ஓர் அமைப்பே ஆதலின் அஃது எல்லாருக்கும் பொதுவான நயன்மை (நீதி) வழங்கி விடும் என்று கூறிவிட முடியாது. ஒரு மதம் இன்னொரு மதத்திற்கு முரண்பாடுள்ளதாகவும், அதனால் உலகில் பல மதங்கள் இருப்பதுமே நம் கொள்கையை வலுப்படுத்துவதற்குரிய போதுமான சான்றாகும். இவற்றில், 'எங்கள் மதந்தான் உயர்ந்தது; சிறந்தது; கடவுளால் உண்டாக்கப் பட்டது; 'அநாதி', 'அதில் தான் நெய்வடிகிறது' என்பதெல்லாம் மூடநம்பிக்கையான ஓர் ஏமாற்றுக் கொள்கையே ஆகும். எனவே, இந்து மதம் என்பதும் ஒரு பெரிய ஏமாற்று அமைப்பே! இதனால் ஒரு குறிப்பிட்ட இனத்தவர்க்கே பெரிதும் நன்மை உண்டாகி வருகிறது. மற்றவர்க்கெல்லாம் தீமையே உண்டாகி வருகிறது. இது முற்றிலும் மெய். இதைப் பொய் யென்று எவரும் மெய்ப்பிக்க முடியாது.

இந்து மதம் இவ்வுலகில் உள்ள அனைத்து மதங்களிலும் மிகக் கேடான மதம்; இழிவான மதம். இதில்தான பலகோடிக் கடவுள்கள் கற்பிக்கப் பெற்றிருக்கின்றன. அவையும் பல குடும்பம் குடும்பமாக வளர்ந்து, ஒரு பெரும் கடவுள் குமுகாயமாகவே ஆட்சி செய்து வருகின்றன. இந்து மதத்தில் எந்த வகையான மாந்த உயர்ச்சிக்கும் ஓர் எள்ளின் மூக்களவும் வழியில்லை. இது மக்கள்பொதுவான அமைப்பும் இல்லை. மக்களைப் பல நூறு சாதிகளாக வேறுபிரித்து, அவர்களுக்குள் இழிவு தாழ்வு கற்பிக்கின்ற 'வருணசிரம'க் கொள்கையே இந்து மதத்திற்கு அடிப்படையானது இதன் வலிந்த ஆட்சியாலேயே இங்குள்ள மக்கள் தாழ்த்தப்பட்டும், வீழ்த்தப்பட்டும், பிற்படுத்தப்பட்டும், நலிக்கப்பட்டும், மெலிக்கப்பட்டும், நசுக்கப் பட்டும், ஒடுக்கப்பட்டும், பழிக்கப்பட்டும், இழிக்கப்பட்டும் எவ்வகை மன, அறிவு, வாழ்வு, உரிமை முன்னேற்றமுமின்றிக் கிடக்கின்றனர். இத்தனைக்கும் இக்கொடுமைகளை இவர்கள் உணர்ந்திருந்தும், இதனின்று வெளியேறி விடுபட முடியாமல் இவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை, இம் மதக் கட்டுக்குள் அடங்கிக் கிடக்க வேண்டி

www.thamizham.net - Free E book No 7510

யுள்ளது ; மூச்சு முட்டிச் சாக வேண்டியுள்ளது. இந்து மதக் கோட்பாடுகளை நம்பியே முன்னேற்றம் ஏதுமின்றி அழிந்துபோன குடும்பங்கள் பல. அழிந்து கொண்டிருக்கின்ற குடும்பங்களும் பற்பல.

இன்னும் தெளிவாகச் சொன்னால், உலகில் மிகவும் மூத்ததும், முதலானதும், நாகரிகம், பண்பாடு, மொழி ஆகியவற்றால் சிறந்திருந்ததுமான தமிழினம், இந்து மதத்தாலேயே நலிவுற்றது; மெலிவுற்றது ; அடிமையுற்றது ; மிடிமையுற்றது. பல ஆயிரக் கணக்கான பிரிவுகளாகப் பிரிந்து வலிவு இன்றிப் போனது. இறுதியில் தன் அனைத்து நலன்களையும் இழந்து இன்று அழியும் நிலையில் உள்ளது. இந்த நிலைகளை, இங்கிருந்த **பெரியார்** போலும் இனத் தலைவர்களால் இன்று ஒருவாறு உணர்ந்து கொண்டு, மீண்டும் தன் இழிவு அழிவுகளைத் தடுத்து நிறுத்திக் கொள்ளும் போக்குடன் ஒருவாறு விழிப்புற்று வருகிறது.

இந்த நிலையில், தமிழர்கள் மேலும் இந்துகளாய் இருக்கத் தேவையில்லை. தங்களைத் தாழ்த்தி வீழ்த்தும் அக் காட்டுவிலங்காண்டிக் கொள்கைகளையே தன் சிறப்பு நிலைகளாகக் கொண்ட அந்த இந்து மதத்தினின்று வெளியேறி உரிமைக் காற்றை நுகர்தல் வேண்டும். முன்னேற்றப் பெருவெளியில் வீறு நடையிடுதல் வேண்டும்.

மதம் மக்களுக்கு நஞ்சு ! அஃது ஒரு பேரிருள்; மடமைகளின் கலவைச் சேறு ! அது மக்களின் முன்னேற்றத்திற்குத் தேவையற்ற ஒன்று. அன்பு, அறிவு, பண்பு, ஒழுக்கம், ஒப்புரவு, பொதுமை, அறவுணர்வு போன்ற எந்த ஒரு நல்லியல்புக்கும் ஓர் இம்மியளவு கூட அஃது உதவுவதில்லை. அதிலும் இந்து மதம் மிகக் கொடிய ஒரு நச்சுப் பாம்பு ! மடமை நிரம்பிய புதை சேற்றுக் குழி ! இதனால் கடிக்கப்படாமல், புதையுண்டு போகாமல் தப்பித்துக்கொள்ள தமிழர்கள் உடனடியாக, ஒட்டு மொத்தமாக, இதனை விட்டு வெளியேற வேண்டும். அவ்வாறு வெளியேறுதவரை தமிழர்கட்கிடையில் உள்ள மூட நம்பிக்கைகளும், இழிவுகளும் சாதிக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. இந்துமதப் பூசல்களும் சாதிக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும், மேலாளுமையிலிருந்தும் தமிழர்கள் மீளவே முடியாது. அவ்வாறு மீளாதவரை தமிழினமும் தமிழ் மொழியும் தலைதூக்க முடியாது. தமிழ் நாடும் தன்னிறைவு பெற முடியாது

எனவே, தமிழர்கள் தம் முன்னேற்றத்தின் முதல் முயற்சியாக இந்து மதப் பிடியை உடனடியாக அகற்றிக் கொள்ள வேண்டும். இந்து மதத்திலிருந்து வெளியேறினால் எந்த மதத்தில் சேருவது என்ற கேள்வியே இப்பொழுது வேண்டா ; எந்த மதமும் மூட நம்பிக்கையின் அடிப் படையிலேயே கட்டப்படுவது. அங்கு உரிமையுணர்வுக்கு வழியில்லை. அறிவு வளர்ச்சிக்கு விடிவில்லை. மதம் ஓர்

www.thamizham.net - Free E book No 7510

ஒருமையுணர்வு வளர்ச்சிக்குத் தேவையென்று சிலர் கருதினால், இந்து மதத்தினின்று வெளியேறிய தமிழர்கள், தங்களைத் 'தமிழ மதம்' 'திருவள்ளுவ மதம்' என்ற கட்டுக்குள் வேண்டுமானால் அடைவித்துக் கொள்ளலாம். **ஆனால் அவையுங்கூட ஒரு காலத்தில் இந்து மதம் போல் வளர்ந்து விடா என்பதற்கு உறுதி எதுவும் இல்லை.** எனவே, இப்பொழுதைக்குத் தமிழர்கள் தங்கள் இன அழிவினின்று விடுபட வேண்டியிருப்பதால் எந்த மதமும் நமக்குத் தேவையில்லை என்பதுவே நம் கொள்கையாகும் எதுவும் நமக்காகத்தானே யொழிய, எதற்காகவும் நாம் என்று இருப்பது ஓர் அடிமை மனப்பான்மையே! எனவே, 'இந்து மதம்' ஒழிக! நாம் 'இந்து' என்னும் அடிமைப் பெயர் ஒழிக! — **பெருஞ்சித்திரன்.**

---

## மனு நூல் எரிப்புப் போராட்டம் பற்றித் தென்மொழியின் கருத்து நிறைவேறுகிறது!

பதின்றோராண்டுகளுக்கு முன்பே மனுநூல், வேதங்கள் முதலிய ஆரிய அடிப்படை நூல்கள் கொளுத்தப்பட வேண்டுமென்ற கருத்தைத் தென்மொழி வெளியிட்டது. இன்று அது செயற்பாட்டுக்கு வந்துள்ளது பெரிதும் மகிழத் தக்கது. தென்மொழியில் (சுவடி 8; ஓலை 5, 6) வந்த அக் குறிப்புரை இது:

### பிராமணீயத்திற்கு இறுதி எச்சரிக்கை!

" . . . அதன்படி, அவர்களின் பூணூல் முதலியவை கழற்றப்பட வேண்டும். கோயில் கருவறைகளினின்று 'பிராமணீயம்' வெளியேற்றப்பட வேண்டும். தமிழ் மொழியினின்று 'அது' தூக்கியெறியப்பட வேண்டும். அரசின் காவலிலிருந்து அது விலக்கப்பட வேண்டும். **'வேத' 'புராண' 'இதிகாச'** 'மநு' முதலிய நூல்கள் **எரிக்கப்பட வேண்டும்.** அவற்றைப் படிப்பது 'குற்றம்' என்று சட்டமியற்ற வேண்டும். **இவை அத்தனையும் இந்தத் தலைமுறையிலேயே** செய்யப் பெற்றாக வேண்டும். இல்லையெனில் அடுத்த தலைமுறையில் **தமிழ் இருக்காது; தமிழனும் இருக்கமாட்டான்.** எனவே இதனைப் பிராமணீயத்திற்கு விட்ட எச்சரிக்கையாக மட்டும் கொள்ளாமல், தமிழர்க்கு விட்ட எச்சரிக்கையாகவும் கொள்க."

---


### அட்டைப் பட விளக்கம்

அந்தமான், 'போர்ட் பிளேயரி'லிருந்து 'இரங்கத்து' என்னும் தீவிற்குப் பாவலரேறு படகில் சென்றுகொண்டிருந்த பொழுது எடுத்த படம். படத்தில் இருப்பவர்கள்: இடப்புறம், திரு. **சுப. சுப்பிரமணியனார்** (ஆசிரியர் 'அந்தமான் முரசு'), நடுவில் **பாவலரேறு,** வலப்புறம். திரு. க **கந்தசாமி.** வணி. இ, (அந்தமான் தி. மு. க. தலைவர்).

www.thamizham.net - Free E book No 7510

# ஆசிரியரின் 'அந்தமான் செலவு'
## (செய்திச் சுருக்கம்)

**வழியனுப்பு :** அந்தமான், போர்ட் பிளேயர் (Port Blair) தென்மொழி மன்றத்தின் அழைப்பினை ஏற்று, கடந்த 18-4-81-ஆம் பக்கல் காரிக்கிழமை, பொறுப்பாசிரியர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள், அன்று புறப்பட்ட 'நான்கவுரி' (Nancowry) கப்பலில் அந்தமான் புறப்பட்டார்கள். அவருடன் பாவலர் **குமர நடவரச ஈவப்பனார்** அவர்களும் உடன் சென்றார்கள். இருவரையும் சென்னைத் துறைமுகத்தில், தென்மொழி அன்பர் குழுவினரும், தென்மொழிக் குடும்பத்தினரும் மாலையணிவித்து வழியனுப்பி வைத்தனர்



**சென்னை, துறைமுகத்தில் பாவலரேறு அவர்களுக்கு வழியனுப்பு**

வழியனுப்ப வந்திருந்த அன்பர்களும் குடும்பத்தினரும் : புலவர் இறைக்குருவனார், 'தமிழம்' ஆசிரியர் செ. பன்னீர்ச்செல்வம்; தென்மொழி மறை நித்தலின்பனார், ப. அருளி, முருகவேள், ஆற்றலரசு, ஓவியர் சின்னையா, பூங்குன்றன், முகுந்தன், இறையன், இளங்கோ, கலைவாணன், இளங்கோவன், முருகேசன், வை. க. தமிழன், இளமுருகன், தென்னவன், பொழிலன், தனஞ்செயன், கிரேசியன், தாமரை பெருஞ்சித்திரனார், பார்வதி அம்மையார், தேவகாந்தி-நித்தலின்பனார், இறை பொற்கொடி, சானகி அறவாழி, கயற்கண்ணி பூங்குன்றன், செல்லம்மாள் கந்தத்தமிழன், தேன்மொழி அருளி

www.thamizham.net - Free E book No 7510



**சென்னை, துறைமுகத்தில் வழியனுப்பு**

*சித்திரச் செந்தாழை, பிறைநுதல், சோதி, செல்வர்கள் இசைமொழி, தமிழ்ச்செம்மல அங்கயற்கண்ணி, தமிழநாடன் ஆகியோர்.*

**கப்பல் செலவு :** கப்பல் மாலை 6 மணியளவில் புறப்பட்டது. அது மணிக்குப் பத்துக் கடற்கற்கள் (Naut Mile) வேகத்துடன் சென்றது. 21-4-81-ஆம் நாள் மாலை அது நிகோபார் தீவையடைந்து, அங்கு ஆட்களையும் சரக்குகளையும் இறக்கவும் ஏற்றவும் செய்து, 22-4-81 அறிவன் பகல் 1 மணியளவில் அந்தமான், போர்ட் பிளேயர் (Port Blair) துறைமுகத்தை அடைந்தது. கப்பல் போர்ட் பிளேயரை நெருங்கிக் கொண்டிருந்த பொழுது, போர்ட் பிளேயர் வானொலியில், இந்தியில், 'நான்கவுரி கப்பலில், தமிழகத்திலிருந்து, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அந்தமான் வந்து கொண்டிருக்கிறார்' என்றும், 'போர்ட் பிளேயர் துறைமுகத்தில் அவரை வரவேற்பதற்குத் தென்மொழி மன்ற உறுப்பினர்களும், அந்தமான் தமிழர் சங்கத்தாரும் காத்துக் கொண்டிருக்கின்றனர்' என்றும் செய்தி கூறப் பெற்றது.

**துறைமுகத்தில் வரவேற்பு :** துறைமுகத்தில் கப்பல் நின்றவுடன், **அந்தமான் முரசு** ஆசிரியர் திரு. **சுப. சுப்பிரமணியமும்**, அந்தமான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. **கந்தசாமியும்** உட்படப் பலர் மாலைகளுடன் வந்து ஆசிரியரவர்களையும், ஈவப்பனார் அவர்களையும் மனங்குளிர வரவேற்றனர். அவர்களில் முகாமையானவர்கள் கு. இளமுருகனார் (பாலசுப்பிரமணியம்) பல்பொருள் வணிகர்), போசராசன் (வணிகர் ; தமிழ்ச் சங்கப் பொருளர்), மாணிக்கம் (காந்தி காமராசுப் பேராயக் கட்சி அமைப்பாளர்), நன்

www.thamizham.net - Free E book No 7510



**போர்ட் பிளேயர் துறைமுகத்தில் வரவேற்பு**

மாறன் (அ. தி. மு. க. அமைப்பாளர்), கதி. மாணிக்கம் (தி மு. க.), மாணிக்கம் (தி. க.), ம. அரசு (வெள்ளிரும்பு வாணிகர்), கண்ணன் (தி. மு. க.), ஆசீர்வாதம் (தெ. மொ ம.), சேவுகர் (தெ. மொ. ம.) சக்திவேல் (தெ. மொ. ம.), அரசு. (தெ. மொ. ம.), வேங்கைமுத்து, கருப்பையா (தெ. மொ. ம.) அறிவின்பம் (விவேகானந்தன் (தெ. மொ. ம.) பாவலர் தி. மு. சீனிவாசன், பாதரக்குடி பாலு (இலக்கிய மன்றம்) முதலிய ஐம்பதுக்கும் மேற்பட்டவராவர்.

**தங்கல் :** அதன் பின் பாவலரேறும் ஈவப்பனும் சுற்றுலாவிடுதியில் தங்க வைக்கப் பெற்றனர். பின்னர்ப் பாவலரேற்றிடம் அனைவரும் தன்னறிமுகம் செய்து கொண்டனர். அன்று மாலை தி. மு. க. செயலர் திரு. **மருதவாணனும்**, பொருளர் திரு. **கோபாலும்** திரு. க. **போ. வேணுகோபாலும்** (இந்திரா பேராய அமைப்பாளர்) மற்றும் சிலரும் வந்து, தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டு, உள்ளூர் அரசியல் நிலைகள் குறித்துப் பலவாறு பேசிச் சென்றனர். கப்பல் வருவது பற்றி உறுதியாக ஏதும் தெரியாதாகையால் அன்று நிகழ்ச்சி எதுவும் வைக்கப் பெறவில்லை.

**அய்டோ தமிழ் உயர்நிலைப் பள்ளி வரவேற்பு :** மறுநாள் காலை 10-30 மணியளவில் 'அந்தமான் முரசு' ஆசிரியர் திரு. சுப. சுப்பிரமணியம் அவர்களும், திரு. இளமுருகனும் ஆசிரியரையும், ஈவப்பனையும் அங்குள்ள விலங்குக் காட்சிச் சாலைக்கு அழைத்துச் சென்றனர். காட்சி முடிந்ததும், அருகிலுள்ள அய்டோ தமிழ் உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பாவலரேற்றிற்கும் ஈவப்பனுக்கும் வர

www.thamizham.net - Free E book No 7510

வேற்பு ஒன்று கொடுத்தனர். நிகழ்ச்சிக்குத் தலைமையாசிரியர் திரு. அரிகோபால்சிங் அவர்கள் தலைமை தாங்கினார். திரு. சப்பார் தொடக்கவுரையாற்றினார். திரு. நாச்சியப்பன் வரவேற்புரை யாற்றினார். ஆசிரியர்களும், ஆசிரியைகளுமாக ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் குழுமியிருந்து மகிழ்ச்சியுடன் ஆசிரியரவர்களை வரவேற்ற நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது. அவர்களின் அன்பான வரவேற்புக்கு ஆசிரியர் நன்றி கூறி உரையாற்றினார்.

**அந்தமான் தமிழர் சங்கம் - சித்திரை விழாவும் வரவேற்பும் :**

மறுநாள் 23-4-81 மாலை 6 மணியளவில் அந்தமான் தமிழர் சங்கக் கட்டடத்தில், சித்திரை விழாவும் பாவலரேற்றுக்கு வரவேற்பு நிகழ்ச்சியும் நடைபெற்றன. திருவாட்டி. சுப்புலட்சுமி சேகர் இறை வணக்கம் பாடினார். நிகழ்ச்சிக்குப் பெருவணிகர் திரு. இளமுருகனார் தலைமை தாங்கினார். அந்தமான் தமிழர் சங்கத் துணைத்தலைவர் திரு. சம்புலிங்கம் ஆசிரியர்க்குப் பொன்னாடை போர்த்தினார். முரசு ஆசிரியர் திரு. சுப. சுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். பின்னர்ப் பாவலர் திரு. தி. மு. திருவாணன் (சீனிவாசன்) தலைமையில் பாட்டரங்கம் நடந்தது. பாவலர்கள் பழ. முருகு, பாதரக்குடி பாலு, கதி. மாணிக்கம், பெரி. குமரப்பன், செல்வி. நிர்மலா, சக்திவேல், அந்தமான் அருண், செல்வி வசந்தி, கரிகாலன் ஆகியோர் குறிப்பிட்ட தலைப்புகளில் பாக்கள் பாடினர். பின்னர்ச் செல்வி. சித்திராவின் பரதநாட்டியம் நிகழ்ந்தது. இசைப் புலவர் சுசிந்திரம் கே. கே. ஆதிகேசவன் அவர்கள் இசை பாட, குடந்தை எ. பிரேம்குமார் மதங்கம் முழக்கினார். நாட்டிய நிகழ்ச்சிக்குப் பின்னர்ப் பாவலர் **குமர நடவரச ஈவப்பனார்** உரை நிகழ்த்தினார். இறுதியில், வரவேற்புக்கு நன்றி கூறி, 'தமிழ்மொழியும் இன முன்னேற்றமும்' என்னுந் தலைப்பில் பாவலரேறு **பெருஞ் சித்திரனார்** இரண்டு மணி நேரம் சிறப்புரையாற்றினார். சொற்பொழிவுக்குப்பின், திருவாட்டி சுப்புலட்சுமி சேகரின் இசைநிகழ்ச்சியுடனும், முரசு ஆசிரியர் சுப. சுப்பிரமணியம் அவர்களின் நன்றியுரையுடனும் நிகழ்ச்சி இனிது முடிவுற்றது.

**தென் அந்தமான் பகுதிகளைப் பார்த்தல் :**

மறுநாள் 24-4-81 (வெள்ளி) காலை 10 மணியளவில் ஆசிரியரையும் ஈவப்பனாரையும், முரசு ஆசிரியர் திரு. சுப. சுப்பிரமணியம், அந்தமானின் தென்பகுதிகளைப் பார்வையிட மகிழுந்தில் அழைத்துச் சென்றனர். பாவலர் திருவாணன், அறிவின்பம், இளங்கோ ஆகியோர் உடன் சென்றனர். பத்தர் கட்டா, அம்பிரிகஞ்சு, தண்ணிகாடி அணை, விம்பர்லி கஞ்சு, சோல்பே முதலிய இடங்களுக்கு ஏறத்தாழ அறுபது கல் தொலைவிற்குச் சென்று திரும்பினர். சோல்பேயில் கான் துறை அதிகாரி திரு. சண்முகநாதன் இல்லத்தில் ,அவர்கள் இல்ல உணவும், கொண்டு போயிருந்த கட்டுணவுடன், பரிமாறப் பெற்றது.

www.thamizham.net - Free E book No 7510

மாலை 4½ மணியளவில் புகழ்பெற்ற அந்தமான் சிறையாகிய செல்லலூர்ச் சிறையும் ஆசிரியரவர்களுக்குச் சுற்றிக் காட்டப் பெற்றது.

**தமிழ் இலக்கிய மன்ற வரவேற்பும் தேநீர் விருந்தும் :**

அன்று மாலை 6-30 மணியளவில் அந்தமான் தமிழர் சங்கக் கட்டடத்தில், அந்தமான் தமிழ் இலக்கிய மன்றத்தார் பாவலரேற்றிற்கும் ஈவப்பனுர்க்கும் வரவேற்பும் தேநீர் விருந்தும் அளித்துச் சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கு திரு. மு. திருவாணன் (சீனிவாசன்) தலைமைதாங்கத் திரு. சாமிநாதன் வரவேற்றார். பாவலரேறு பெருஞ்சித்திரனார் 'இலக்கிய நலன்கள்' என்னுந் தலைப்பில் அரிய உரையாற்றினர். திரு. அரசு நன்றி கூற நிகழ்ச்சி நிறைவுற்றது.

**அனைத்துக் கட்சியினரின் வரவேற்பு :**

அன்று (24-4-81) மாலை 7 மணியளவில், இரத்தின அங்காடித் திடலில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கும் ஈவப்பனுர்க்கும், அனைத்துக் கட்சியினரின் சிறப்பான வரவேற்பு நிகழ்ந்தது. கூட்டத்திற்கு திரு கோ. கண்ணன் தலைமையேற்றார். திருவாளர்கள் மருதவாணன் (செயலர் மா. வ. தி. மு. க.), து. க. கோபால் (தலைவர் மா. வ தி. மு. க.), மு. மாணிக்கம் (தி. க), கிருட்டிணன் (தி. மு. க.), இராமன் (தி. மு. க). அர்ச்சுனன் (தி. மு. க.) செல்லமணி (அ. தி. மு க.), கதி. மாணிக்கம் (அ. தி. மு. க.) வெ. சண்முகம் (இ. பேராயம்) ஆகியோர் வரவேற்புரையாற்றினா. அனைத்துக் கட்சிகள் சார்பிலும் பாவலரேற்றிற்கு மாலைகளும் கைத்தறியாடைகளும் அணிவிக்கப்பெற்றன. கூட்டத்தில் ஒருவர் பாவலரேற்றிற்குத் தாமரைப் பூக்கலை அன்பளிப்பாகத் தந்தார். திரு கே. கே. மணி மாலைக்கென உரு. 5/- அன்பளிப்பாகத் தந்தார். இறுதியில் பாவலர் திரு ஈவப்பவனர் உரைக்குப் பின், பாவலரேறு அவர்கள் அந்தமான் தமிழர் அரசியல் ஈடுபாடுகள் குறித்து நீண்ட சிறப்புரை யாற்றினர். இரவு 10 மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது. அன்றைய நிகழ்ச்சிக்குப் பின்னர் அனைத்துக் கட்சித் தலைவர்களும் சுற்றுலா விடுதிக்கு வந்து ஆசிரியா அவர்களைப் பார்த்துப் பலவகையான அரசியல் விளக்கங்களைக் கூறிவிட்டுச் சென்றனர். இரவு உணவு திரு. சுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் நடந்தது.

**ஈவப்பனுர் புறப்பாடும் பாவலரேற்றின் இரங்கத்து நிகழ்ச்சியும் :**

மேற்கொண்டு நிகழ்ச்சிகளில் தொடர்ந்து கலந்து கொள்ள இயலாமையால், பாவலர் திரு. குமர நடவரச ஈவப்பனுர் தமிழகம் திரும்ப வேண்டுவதாயிற்று. ஆசிரியரவர்கள் 25-4-81 காலை 5 மணியளவில் போர்ட் பிளேயரிலிருந்து ஏறத்தாழ ஐம்பது கடல்கற்கள் தொலைவில் உள்ள இரங்கத்து என்னும் தீவிற்குச் செல்ல வேண்டியிருந்தது. திரு. ஈவப்பனுரும் அன்று காலை 9 மணியளவில் புறப்

www.thamizham.net - Free E book No 7510

பட்ட நான்கவுரி (அவர்கள் சென்ற அதே) கப்பலில் தமிழகம் திரும்பினார். பாவலரேறு அவர்கள், திருவாளர்கள் சுப. சுப்பிரமணியம், கந்தசாமி அவர்களுடன் இரங்கத் புறப்பட்டார். அவர்களுடன் தென்மொழி மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் அறிவின்பம், சுப. சேவுகர், பெரி. கணேசன் ஆகியோர் உடன் சென்றனர். படகு 6-45க்குப் புறப்பட்டு வடக்கு நோக்கிச் சென்று, பகல் 1-30 மணியளவில் இரங்கத்து என்னும் தீவையடைந்தது. கையில் எடுத்துச் சென்ற காலைச் சிற்றுண்டியைப் படகில் உண்டனர்.

**பகுல்தலா வரவேற்பு :** படகுத்துறையிலிருந்து 5 கல் தொலைவிலுள்ள இரங்கத்து வழிப்போக்கர் விடுதிக்கு மலையுந்தில் செல்கையில் கடைத் தெருவில் மூன்று சாலைகள் கூடுமிடத்தில், மறைந்த தமிழகத் தி. மு. க. தலைவர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியின் சிலையைப் பாவலரேறு பார்வையிட்டார்கள். சிலை தமிழகத்தில் செய்யப்பெற்று, திரு கந்தசாமி அவர்களின் பெருமுயற்சியால் வைக்கப்பெற்றது. வழிப்போக்கர் விடுதியில் இடமின்மையால், திரு கந்தசாமியின் பல்பொருள் வாணிகக் கடைக்குச் சென்றனர். கடைக்கு மேல் வீடு இருந்தது. சிறிது நேர ஓய்வுக்குப்பின், பகுல்தலா பகுதியில் உள்ள பிர்லாவின் ஒட்டுப் பலகைத் தொழிற்சாலைக்குப் பாவலரேற்றை அழைத்துச் சென்றனர். தொழிற்சாலையின் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்ட பின், பகுல்தலா தமிழ்ச்சங்கத்தினர் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாலை 4-30 மணியளவில் கலந்து கொண்டு, பாவலரேறு உரையாற்றினார்கள். நிகழ்ச்சிக்குத் திரு. கந்தசாமி தலைமையேற்றார். முரசு ஆசிரியர் திரு. சுப. சுப்பிரமணியனார் அறிமுகவுரையாற்றினார். ஊராட்சி மன்றத் தலைவர் திரு. இராமன் வரவேற்புரையாற்றினார். திரு. கார்மேகம் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது. அதன் பின்னர் அனைவரும் இரங்கத்து அண்ணா படிப்பக இலக்கிய மன்ற நிகழ்ச்சிக்குச் சென்றனர்.

**இரங்கத்து வரவேற்பு :** மாலை 7 மணியளவில் இரங்கத்துக் கடைத் தெருவில் உள்ள அண்ணா படிப்பக இலக்கிய மன்றத்தாரின் வரவேற்பு நிகழ்ச்சியில் பாவலரேறு கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சிக்கு திரு. கந்தசாமி, தலைமை தாங்கினார். ஆசிரியர் திரு. செயராமன் வரவேற்புரையாற்றினார். திருவாளர்கள் ஆசிரியர் எம். இராமச்சந்திரன், இரா. வி. இராசாமணி (உடற்பயிற்சி ஆசிரியர்). திரு. சுப. சுப்பிரமணியனார் ஆகியோரின் உரைகளுக்குப்பின், பாவலரேறு அவர்கள் 'தமிழும் திரவிட மொழிகளும்' என்னுந் தலைப்பில் இரண்டு மணி நேரம் அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிவாற்றினார். திரு. ஆ. க. கந்தசாமியின் நன்றிஉரைக்குப்பின், இரவு 10-30 மணியளவில் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது. இரவு தலைவர் திரு. க. கந்தசாமி. வ.ணி. இ. அவர்களின் இல்லத்தில் பாவலரேறு அவர்களுக்கு இனிய விருந்து அளிக்கப் பெற்றது.

www.thamizham.net - Free E book No 7510

**போர்ட்டு பிளேயர் திரும்புதல் :** 26-4-81 காலை 4 மணியளவில் அனைவரும் புறப்பட்டு, 5½ மணியளவில் செல்லும் படகை அடைந்தனர். படகில் தமிழ்நாடு செட்டிக்குறிச்சியைச் சேர்ந்த அரங்கராசு என்னும் படகு வலவர் பாவலரேற்றிற்குக் காலைச் சிற்றுண்டியும், மீன் உணவும் கொடுத்து அன்பாக வரவேற்றார். படகு பகல் 1 மணி அளவில் போர்ட் பிளேயர் வந்தது. தங்கும் விடுதிக்குச் சென்று பாவலரேறு அவர்கள் சிறிது நேர ஓய்வுக்குப்பின். மாலையில் அருகில் உள்ள வேறொரு தீவு நிகழ்ச்சிக்குப் புறப்பட அணியமானார்கள்.

**வெம்பர்லி கஞ்சு நிகழ்ச்சி :**

மாலை 5-30மணியளவில் படகு வழியாகப் புறப்பட்டு மூங்கிற் படுகை (Bamboo Flat) என்னும் தீவுத் துறையை அடைந்தனர். அங்கிருந்து பேருந்து வழியாக 7 மணியளவில் வெம்பர்லிகஞ்சு சேர்ந்தனர். அங்கு முத்தமிழ் இலக்கிய மன்றத்தில் வரவேற்புக் கூட்டம் நடந்தது. செல்விகள் செயலக்குமி, அமுதா தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட, நிகழ்ச்சிக்கு ஆசிரியர் திரு. அ. மு. மு. பரூக் தலைமை தாங்கினார். திரு. ம. சி. பாரதி வரவேற்புரையாற்றினார். திருவாளர்கள் கந்தசாமி, சுப. சுப்பிரமணியனார் ஆகியோரின் உரைக்குப்பின் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நீண்ட இனிய சிறப்புரையாற்றினார். திரு. சுந்தர மூர்த்தி, பாவலரேற்றிற்குப் பொன்னாடை போர்த்தினார். திரு. சோலைமலையின் நன்றியுரைக்குப்பின் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது. நிகழ்ச்சிக்குப்பின் அனைவர்க்கும் விருந்து அளிக்கப் பெற்றது. விருந்து முடிந்ததும் பேருந்து வழியாகவும் படகு வழியாகவும் இரவு 10-30 மணியளவில் போர்ட்டு பிளேயர் தங்குமனைக்கு அனைவரும் வந்தனர்.

**தென்மொழி மன்றத்தாரின் இறுதி நாள் நிகழ்ச்சி :**

27-4-81 பகல் பாவலரேறு அபர்டீன் கடைத்தெருவுக்கு அன்பர் சிலருடன் சென்று சில நூல்களும் படங்களும் வாங்கினார். பிற்பகல் அந்தமான் தமிழர் சங்கக் கட்டடத்தில் தென்மொழி மன்றத்தார் பாவலரேற்றின் வழியனுப்பு நிகழ்ச்சி வைத்திருந்தனர். மாலை 6-30 மணியளவில் நிகழ்ச்சி தொடங்கியது. நிகழ்ச்சிக்கு திரு. க. கந்தசாமி வணி. இ. தலைமையேற்றார். திரு. சாமிநாதன வரவேற்புரையாற்றினார். தென்மொழி மன்ற அமைப்பாளர் திரு. சுப. சுப்பிரமணியனார் அவர்களின் உணர்வுரைக்குப்பின் தலைவர் உரையாற்றினார். இறுதியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** இரண்டு மணி நேரம் 'தமிழர் வீழ்ச்சியும் மீட்சியும்' என்னுந் தலைப்பில் அரிய சிறப்புரையாற்றி, அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டார். இரவு தங்கு மனையில், சைனூல் அப்தீன் என்னும் திரைப்படக் கொட்டகை உரிமையாளர் வைத்த விருந்தில் பாவலரேறு கலந்து கொண்டார்.

**அன்பகர்ள் விருந்தும் கலந்துரையாடலும் :**

28-4-81-இல் வரவிருந்த ஏர்இந்தியா வானூர்தி வராமற்

www.thamizham.net - Free E book No 7510

போகவே, பாவலரேறு 29-4-81-ஆம் நாள் புறப்பட வேண்டி வந்தது. 28-4-81-அன்று இரவு அந்தமானில் உள்ள தமிழ வணிகர்கள் ஆகிய திரு. போசராசன், (ஏ. கே. டி. உடன் பிறப்பாளர் சார்பாக) திரு. கு. இளமுருகனார் (பாலசுப்பிரமணியம், தி. எசு. குருசாமி மகார் சார்பாக), திரு. ப. அ. சம்புலிங்கம் (பி. ஏ. ஆறுமுகம் மகார் சார்பாக) திரு கி. பரமசிவம் (க. கிருட்டிணசாமி மகார் சார்பாக) ஆகிய அனைவரும் சேர்ந்து, பாவலரேற்றிற்கு, திரு. போசராசன் வீட்டில் ஒரு விருந்து கொடுத்துப் பெருமைப்படுத்தினர். விருந்தில் தி. மு. க. தலைவர் திரு. கந்தசாமி, 'அந்தமான் முரசு' ஆசிரியர் சுப. திரு. சுப்பிரமணியனார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விருந்து முடிந்ததும் இரவு 10-30 மணியளவில் பாவலரேற்றுடன் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி ஏற்பாடாகி யிருந்தது. கலந்துரை யாடலில் மேற்கண்ட தமிழ வணிகச் செல்வருடன். அன்பர்கள் திருவாளர்கள், ஆசீர்வாதம், சக்திவேல், பழனியப்பன், சேவுகர், சு. சுவாமிநாதன், ஆ. சுவாமிநாதன், பழ. முருகு, பெரி. குமரப்பன், பாலகோவிந்தராசு, பெரி. கருப்பையா, அறிவின்பம் (விவேகானந்-தம்), போசராசன் அண்ணன் மக்கள் இருவர், சம்புலிங்கன் மகன் ஒருவர், மற்றும் அங்காடி ஊழியர் சிலர் கலந்து கொண்டு, பாவல ரேற்றிடம் பல துறை வினாக்களை பெழுப்பினர். பாவலரேறு அவற் றிற்கெல்லாம் மிக அமைதியுடனும் அன்புடனும் விளக்கமாகவும் திறமையாகவும், சிலபொழுது நகைச்சுவையுடனும் விடை கூறி, அன்பர்கள் நிறைவுறுமாறு செய்தனர். பின்னர் இரவு 12 மணி யளவில் தம் இருப்பிடம் சென்றனர்.

**காளிக்கோட்டம் (கல்கத்தா) வழி, தமிழகம் திரும்புதல் :**

மறுநாள் 29-4-81 அன்று அறிவன் கிழமை, போர்ட் பிளேயர் வானூர்தி நிலையத்திலிருந்து, காலை 9-30 மணியளவில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் ஏர்இந்தியா வானூர்தி வழியாகக் காளிக்கோட்டம் (கல்கத்தா) சென்றார்கள், தலைவர் திரு, கந்தசாமி, 'முரசு ஆசிரியர்' திரு. சுப. சுப்பிரமணியனார், திரு. இளமுருகனார் (பாலசுப்பிரமணியம்), திரு. சம்புலிங்கம், திரு. அறிவின்பம், திரு. சேவுகர் முதலியோர் வானூர்தி புறப்படும் வரையிருந்து, பாவல ரேறு அவர்களை அன்புடனும், கண்ணீர் தேங்கும் கண்களுடனும் வழியனுப்பி வைத்தனர். வானூர்தி காளிக்கோட்டம் வானூர்தி நிலையத்தைப் பகல் 11-30 மணியளவில் அடைந்தது. அங்கிருந்து, சென்னை வரும் வானூர்தியில் 12 மணியளவில் ஏறி, அன்று பிற்பகல் 2-15 மணியளவில் சென்னைக்கு முழு நலத்துடன் பாவலரேறு அவர்-கள் வந்து சேர்ந்தனர். மொத்தத்தில் பாவலரேறு அவர்களின் 'அந்தமான் செலவு' மிக்க பயனுள்ளதாகவும், தமிழ் விளைவு சான்ற தாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. (முழு விளக்கமும், பாவலரேறு அவர்கள் எழுதும் **'அந்தமான் செலவு'** கட்டுரையில் விரிவாக வெளிவரும்.)

o

www.thamizham.net - Free E book No 7510

# தமிழர் சிந்தனைக்கு...!

தமிழை ஏற்றிப் போற்றுவதென்றால், தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் ஆராய்ச்சி **மட்டும்** இல்லை. பழங்கதைகள் சொல்வதோ, பண்டைப் பெருமைகளைப் பேசுவதோ **மட்டும்** அல்ல. அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம், ஆளுமை போன்ற துறைகளில் தமிழ் ஏற்றம் பெற வேண்டும். தமிழர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் தமிழைப் பயன்படுத்த வேண்டும். 'அன்றாட வாழ்க்கையில் தமிழைப் பயன்படுத்தாமலா இருக்கிறோம்?' எனப் பலர் வினவலாம். தமிழை ஏற்றிப் போற்றவில்லை என்பதற்கு இதோ சில சான்றுகள்.

**படித்தவர்கள் எனப்படுவோரில் பெரும்பாலோர்,**

1) ஆங்கிலத்தில் கையெழுத்திடுகிறார்கள் — (பிற நாடுகளில் அவரவர்கள் தாய்மொழியில் கையெழுத்திடுவதுதான் வழக்கம்.)

2) 'ஆங்கிலத்தில் பேசுவது, எழுதுவதுதான் உயர்வு; தமிழில் பேசுவது, எழுதுவது தாழ்வு' என்ற மனப்பாங்கினர்.

3) திருமணம் போன்ற விழாக்களில் தமிழைப் பயன்படுத்துவதில்லை.

4) தொடக்கக் கல்வியில்கூட பயிற்சி மொழி ஆங்கிலமாகத்தான் இருக்கவேண்டும் என்ற **அறியாமையை** வளர்க்கின்றனர், [ஆம் அறியாமைதான். கல்வி அறிஞர் எவரும் தொடக்கக்கல்வி தாய்மொழியில்லாத வேற்றுமொழியில் இருப்பதை ஆதரிக்கவில்லை.]

படித்தவர்கள் வழிகாட்டிகளாகத் திகழவேண்டும். வழிகாட்டிகளே தமிழைப் புறக்கணித்தால் வழி நடப்பவர்கள் எப்படிப் போற்றுவர் என்பதைத் தெரிவிக்கத்தான் படித்தவர்களின் நிலையைச் சான்று காட்டினோம்.

**தமிழகத்தில் இன்று தமிழின் நிலை என்ன ?**

**1956**-இலேயே தமிழ் ஆட்சிமொழிச்சட்டம் வந்தும் இன்னும் தமிழ் முழுஅளவில் மாநில ஆட்சிமொழியாக மலரவில்லை.

கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழித் திட்டத்தை விரிவுபடுத்த அரசும், பல்கலைக் கழகமும் முயற்சி செய்தால், சாய்கால் பெற்ற சில தந்நலத் தமிழர்களே அதற்கு முட்டுக்கட்டை போட்டுவிடுகின்றனர்.

அற மன்றங்களில் ஆங்கிலமே ஆட்சி செலுத்துகின்றது.

கோவில்களில் வேற்று மொழிகளே ஆளுமை செய்கின்றன.

(தொடர்ச்சி 40-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7510

# தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்.

— பெருஞ்சித்திரனார்—

பாவாணரின் செம்மாந்த கருவி நூல்களைப் போல் வேறு நூல்கள் வெளிவரவில்லையாயினும், அறிஞர்கள் பலரால் அவ்வப் போது சில நூல்கள் எழுதப்பெற்று வெளிவந்தன. சைவ சித்-தாந்த நூற்பதிப்புக் கழகச் சார்பாக, சென்னை, தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், நீலாம்பிகையம்மையாரின் 'வடசொற்றமிழ் அகரவரிசை' யைச் சிறு வெளியீடாக (1938) வெளியிட்டது. அதைத்தொடர்ந்து, 'தமிழ்ச்சொற்களைப் பிழைநீக்கி எழுதும் முறை, 'மக்கட்பெயர் அகர வரிசை', 'தமிழ்நாட்டுப் பழமொழி அகரவரிசைச் சுருக்கம்', 'அழைப் பிதழ் எழுதுமுறை', 'உவமையகரவரிசை', 'மரபுத்தொடர் அகர வரிசை' 'இல்லப்பெயர் அகரவரிசை' முதலிய சிறுசிறு நூல்களை வெளியிட்டுப் பரப்பி, மக்களிடம் தூயதமிழ் உணர்வு பரவும்படி செய்தது.

பர். அ. சிதம்பரநாதனார், பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை யார் ஆகிய அவர்களின் பெருமுயற்சியால் சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாக (1965) வந்த 'ஆங்கில தமிழ்ச் சொற்களஞ்சியம்' என்னும் அகரமுதலியில் ஆயிரக்கணக்கான தூயதமிழ்ச் சொற்கள் கையாளப் பெற்றிருந்தன. அவற்றுள் சில எடுத்துக்காட்டுகள் :

Aerial — வான்கம்பி, Argue — சொல்லாடு, Automobile — தானியங்கி, Bacteria — நுண்மம், Bakery — அப்பமனை, Balloon — ஊதற்பை, Carbon — கரியம், Cement — பசைமண், Chlorine — பாசிகம், Generator — மின்னாக்கி, heart — நெஞ்சுப்பை, hydrogen — நீரகம், ice — உறைநீர், lace — வரிழை, nitrogen — வெடியம், Oxygen — உயிரகம், Metric — பதினளவை முதலியன.

அறிஞர். கீ. இராமலிங்கனார், ஆட்சிச்சொல் அகரவரிசை (1924) நகராட்சிமுறை (1954), தமிழ் ஆட்சிச் சொற்கள் (1960), ஆட்சித் துறைத்தமிழ் (1968) — முதலிய நூல்களை எழுதினார். நல்ல தமிழ் வளர்ச்சியில் அறிஞர் பலரும் ஈடுபட்டனர். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் நல்ல தமிழ்ச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார். மற்றும் அறிஞர்கள் க. வெள்ளைவாரணனார், மேலகரம் நீ. கந்தசாமியார், பர். மா. அரசமாணிக்கனார், பேரா. அ. சிதம் பரநாதனார், துடிசைக்கிழார் அ. சிதம்பரனார், ந.மு.வேங்கடசாமியார், கார்மேகனார், வரகுண பாண்டியனார், கல்வெட்டாராய்ச்சிப்புலவர் தி. வி. சதாசிவனார், உரைவேந்தர் பேரா. ஔவை. சு. துரைசாமி யார், பெருமழைப்புலவர் தி. பொ. வே. சோமசுந்தரனார், அழகரடிகள்

www.thamizham.net - Free E book No 7510

மே. வீ. வேணுகோபாலனார், மயிலை சீனி. வேங்கடசாமியார், பர். சி. இலக்குவனார், கா. அப்பாதுரையார், பர். மு. வரதராசனார், உறையூர் புலவர் இறையனார், மறைமலையடிகள் மகனார் மறை. திருநாவுக்கரசு, முதலியோர் தமிழ்மொழியைத் திருத்தமாகவும் இலக்கண மரபு வழுவாமலும், பெரும்பாலும், பிறமொழிக் கலப்பின்றியும் நல்ல உரை நடை வளர்ச்சிக்குத் துணை நின்றனர். பர். மு. வரதராசனார் தம் "மொழி வரலாறு" என்னும் நூலில் "தனித்தமிழ் உண்டோ என (இலக்கணக் கொத்துரை. பாயிரம் 7) எழுப்பிய வினாவே, பிற் காலத்தில் தனித்தமிழியக்கத்தை வளர்ப்பதற்குக் கரணியம் ஆயிற்று" என்றும், "தமிழ் இலக்கிய வரலாறு" என்னும் நூலில், "வடமொழி அறிஞர்கள் யார்யாரோ என்றோ செய்த தவறுகளின் விளைவுகள் இன்றும் உள்ளன. அவர்களுக்கு அன்று இருந்த வடமொழியறிவு பற்றிய செருக்கே, இன்று உள்ள தனித்தமிழ் வளர்ச்சி வேகத்துக்குக் கரணியம் ஆயிற்று" என்றும் எழுதினார். அவர் நல்ல தமிழ் நடையில் முப்பதுக்கு மேற்பட்ட புதினங்களை எழுதிப் பொதுமக்களிடம் நல்ல தமிழ்நடை வளரத் துணை நின்றார். அவர் தம் கதை நூல்களில் வரும் உறுப்பினர்கள் பெயர்களெல்லாம் நல்ல தமிழில் இயங்கின. சட்ட அறிஞர் மா. சண்முக சுப்பிரமணி யனார் சில சட்டத்துறை நூல்களைத் தமிழில் எழுதினார். அவரெழுதிய நூல்கள் 'சட்டநூல்கள்', சட்ட இயல், குற்ற இயல், தீங்கியல் சட்டம், குற்றமும் தண்டனையும், சட்டத்தமிழ் முதலியனவாகும். புதுவை, புலவர் சுந்தர சண்முகனார் 'தனித்தமிழ்க் கிளர்ச்சி' எனும் செய்யுள் நூலை 1947-இல் எழுதி வெளியிட்டுள்ளார். தமிழறிஞர்கள் கி. ஆ. பெ. விசுவநாதம், ம. பொ. சிவஞானம் முதலியவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணாத்துரை, இரா. நெடுஞ் செழியன், மு. கருணாநிதி, அன்பழகன் போன்றவர்களும் நல்ல பேச்சுநடை வளரப் பெரிதும் துணை நின்றனர். இக் கழகத்தினரின் சொற்பொழிவுகளால், முன்னர் பெருவழக்காயிருந்த அக்கிராசனர், காரியதரிசி, பொக்கிஷதார், உபந்யாஸம், கரகோஷம், சபாஸ், நமஸ் காரம் முதலிய மேடைப் பேச்சுச் சொற்களெல்லாம் அடியோடு மறைந்து விட்டன. தமிழாசிரியர் வை. பொன்னம்பலனார் என்பவர் மாணவர்களிடையேயும், பொதுமக்களிடையேயும், தனித்தமிழி லேயே பேசியும் எழுதியும் தனித்தமிழ் வளர்ச்சிக்குப் பெரும் ஆக்க மாயிருந்ததை எவரும் மறத்தற்கியலாது. வேலூர் மு. அண்ணல் தங்கோ என்பவர் தம் வாணாள் முழுவதும் தனித்தமிழ் வளர்ச்சிக் காகவே பாடுபட்டு வந்ததும் குறிப்பிடத் தகுந்தது.

தூயதமிழ் வளர்ச்சியில் பாவேந்தர் பாரதிதாசனாரின் பங்கும் மிகப் பெரிதாகும். அவருடைய 'தமிழியக்கம்' என்ற அரிய பாடல் நூல் தனித்தமிழ் வளர்ச்சிக் கருத்துக்களையே பெரிதும் கொண்ட தாகும். 'தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்', 'இமயமலை போலு யர்ந்த ஒரு நாடும் தன்மொழியில் தாழ்ந்தால் வீழும்', 'நன்மொழிக்கு

www.thamizham.net - Free E book No 7510

விடுதலை நல்கிட எழுந்திடு', 'தாய்ப்பாலில் நஞ்செனவே தமிழில் வடமொழி சேர்த்தார்' தவிர்தல் வேண்டும், 'தமிழ்ப்புலவர் தனித் தமிழில் நாடகங்கள் படக்கதைகள் எழுதல் வேண்டும்,' 'வாணிகர் தம் முகவரியை வரைகின்ற பலகையில் ஆங்கிலமா வேண்டும்? மாணுயர்ந்த செந்தமிழால் வரைக என அன்னவர்க்குச் சொல்லல் வேண்டும்', 'வடமொழியும் பிழைத்தமிழும் பெருகிவிட்டால், வருநாளில் தமிழ் அழியும், வடமொழி மேலோங்கும்', 'தமிழ் தழுவாச் சுவடிகளைத் தணல் தழுவவேண்டும், இனி,' என்பன போலும் நூற்றுக் கணக்கான பாடல் வரிகள் தமிழ்நாட்டு இளைஞர் உள்ளங்களிலும் மாணவர், ஆசிரியர் உணர்வுகளிலும் போய்க் கலந்து நல்ல தமிழ் உணர்வை எழுப்பின. அவர் முன்னாளில் வெளியிட்ட முதற்பதிப்பு நூல்களில் உள்ள வடமொழிச் சொற்களையெல்லாம் பின்னாளில், வெளியிட்ட மறுபதிப்புகளில் கூடிய வரையில் அகற்றித் தூய தமிழ் விளங்கச் செய்தார்.

மறைமலையடிகள் மருமகனார் திருவரங்கனாருக்குப் பின், தென் இந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அமைச்சுப் பொறுப்பேற்று மேலாளுமை செய்த அவர் தம்பியார் திரு. வ. சுப்பையா (பிள்ளை) அவர்கள், அக் கழகத்தை மேலும், பல்வகையாலும் திறம் பெற நடத்தி, ஆயிரக்கணக்கான பல்துறை நூல்களையும் வெளிவரச் செய்ததுடன், புலவர்கள் பலருக்கும் ஊக்கமாகவும் ஆக்கமாகவும் இருந்து நல்ல தமிழை நாடொறும் வளர்த்து வந்தார்; வருகின்றார். அவரின் 'செந்தமிழ்ச் செல்வி'யிலும், கரந்தைத் 'தமிழ்ப் பொழி'லிலும். ஆயிரக்கணக்கான தனித்தமிழ்க் கட்டுரைகள் வெளிவந்தன; வருகின்றன

## ஆ. சில அடிப்படைச் சிக்கல்கள்

மறைமலையடிகளாரின் கொள்கை வலித்தத்திற்கு ஆதரவாக இவ்வாறு அறிஞர்கள் பலராலும் ஆங்காங்கே, தாம் எழுதும் நூல்கள் வழியாகவும் பேசும் பேச்சுகள் வழியாகவும் பலவகையான கருத்தறிவிப்புகளும் சில செயல்களும் நடந்தனவே தவிர, அக்கொள்கையைத் தம் முழுவாழ்வு முயற்சியாக எடுத்துக் கொண்டு, அதை ஓர் இயக்கமாக மக்களிடம் பரப்பும் முயற்சியில் எவரும் ஈடுபடவில்லை. எனவே, அஃது ஓர் அரசியல் கட்சிபோல் இயங்க முடியவில்லை. ஏனெனில் அக்கொள்கை பொதுமக்களை ஈர்க்குமளவிற்கு அத்துணைக் கவர்ச்சியுடையதாக இல்லை. அவ்வப்பொழுது ஏற்படும் கால, அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, தாங்கள் நடந்து கொள்ள வேண்டியிருந்ததாலும், செய்தித்தாள்களின் வலித்தத்தாலும், பிற வானொலி, திரைப்பட அமைப்புகளாலும், பொதுமக்கள் மொழிநிலையைப் பற்றி ஒன்றும் கவலைப்படாதவர்களாக, தங்களையறியாமல் ஒரு பொது நிலை உருவாக்கத்திற்கே ஆட்பட்டு வந்தார்கள். எல்லா நிலைகளிலும்

www.thamizham.net - Free E book No 7510

கலப்புத்தனமான ஒரு போங்கு நிலையே அவர்களிடம் இருந்தது. மற்றும் வாழ்க்கையின் அழுத்தமான பொருளியல் முயற்சிகளும், விடுதலை பெற்ற நாட்டில் ஏற்பட்ட அரசியல் ஆர்ப்பாட்டங்களும், மேனாட்டு நாகரிகக் கவர்ச்சியழுத்தமும், அவர்களைத் தங்கள் மொழி, கலை, பண்பாடு இவற்றில் தனிக்கவனம் செலுத்த முடியாதவர்களாக ஆக்கி வந்தன. எனவே, மொழியியல் முயற்சிகள் முதலில் படித்தவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அதிகாரிகள் இவர்களிடையில் மட்டும் செயல்படுவதான ஓர் இயக்கமாக நடைபெற வேண்டுவதாயிற்று. அவ்வாறு மொழிக்கென மட்டும் ஓர் இயக்கத்தில் ஈடுபட்டு, மதமும் அரசியல் சூழ்ச்சிகளும் வல்லாண்மை செலுத்தும் ஒரு நிலையில், அரசுப்பணியில் உள்ளவர்களும், ஆசிரியர் களும், படித்தவர்களும், செயலாற்ற அணியமாக இருக்கவில்லை. அவர்கள் அரசினரின் பதவியமர்த்தத்திற்கும், பொருளீட்டங்களுக்கும் பிற வாழ்வியல் முயற்சிகளுக்கும் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டி யவர்களாக இருந்தார்கள். எனவே, மொழியியல் சார்ந்த தனித் தமிழ் இயக்கம் எந்நிலையிலும் வரையறுக்கப்பெற்ற ஓர் அமைப்பாகச் செயல்பட முடியவில்லை. மேலும் மொழி பற்றிய அறிவையும் உணர்வையும் பொதுமக்களுக்கோ, அலுவல்களில் ஈடுபட்ட படித்த பிறர்க்கோ ஏற்படுத்துவது அவ்வளவு எளிதாயில்லை. தக்க விளம் பரக் கருவிகளும், தனி முயற்சிகளும், பொருள்வலிவும், தொண்டு ஈடுபாடுகளும் அதற்குக் கட்டாயத் தேவைகளாக இருந்தன. வெறும் தமிழ் மொழியறிவும் இலக்கிய ஈடுபாடும் உள்ள புலவர்கள் பாங்கி னின்று ஊற்றெடுத்த இவ்வியக்கம், நாட்டின் மற்ற நிலையில் உள்ள வர்களிடம் எவ்வகையிலும் போய்ப் பரவ முடிவதாக இல்லை. மேலும், தனித்தமிழியக்கத்தை மக்களின் இடைநிலையில் உள்ளவர்களிடம் சென்று பரப்புவதற்கான அறிவும் ஆற்றலும் செயல் திறனும் பெரும் பாலான புலவர்களிடம் இருப்பனவாகக் கருத முடியாது. அவர்கள் வெறும் மொழியியல் ஆராய்ச்சியிலும், இலக்கியத் திறனாய்விலும் வரலாற்றிலுமே தங்கள் அறிவையும், முயற்சிகளையும் ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்கள். அத்துடன், போதுமான ஆங்கில அறிவும், அறிவியல் தெளிவும் பெரும்பாலான தமிழ்ப்புலவர்களிடம் இருப்ப தில்லை. பலதுறை அறிவியல் சொற்களை மொழி பெயர்ப்பதற்கும் நடைமுறைக்குக் கொணர்வதற்கும் அறிவியலறிவு மிகமிகத் தேவை யாக விருந்தது. வெறும் தமிழறிவோ இலக்கண இலக்கிய ஆராய்ச்சி அறிவு மட்டுமோ இந்த வகையில் பயனளிக்காது. இவற்றைக் கொண்டு, மக்களிடம் அல்லது நடுத்தர அறிவுள்ளவர்களிடம் தனித் தமிழியக்கத்திற்கு ஓர் உருப்படியான ஆக்கத்தைத் தேடிவிட முடியாது. தனித்தமிழியக்கத்தை மக்களிடம் பரப்புபவர்களுக்குப் போதிய மொழியியல் அறிவும், மொழி, இன வரலாற்று அறிவும், சொல்லாக்கத் திறனும், ஆங்கில அறிவும், அறிவியல் தெளிவும், மக்க ளின் அன்றாட அரசியல் பொருளியல் வேட்கைகளைத் தழுவி இக்கொள்

www.thamizham.net - Free E book No 7510

கையை அவர்களிடம் எடுத்துச் சொல்லும் அல்லது எழுதிக்காட்டும் சொல்லாற்றலும், எழுத்தாற்றலும், ஊக்கமும் உழைப்பும், விடா முயற்சியும், ஊதியங்கருதாத் தன்மையும், உண்மையும் நடுநிலைமையும், இடர்களும் இழப்புகளும் நேர்ந்தவிடத்துச் சிறிதும் மன அசைவு கொள்ளாமல், கொள்கையில் உறைத்து நிற்கும் உரனும், போதிய பொருள் வலி, துணைவலி தேடிக் கொள்ளும் உலகியலறிவும் இன்னோரன்ன பலவும், கட்டாயத் தேவைகளாக இருத்தல் வேண்டும். மேலும், ஆட்சியதிகாரத்துணையின்றி எந்த ஒரு கொள்கையியக்கமும் உறுதியாக வெற்றியளிக்க முடியாதாகையால், இம்முயற்சி நடைபெறுங் காலத்தில், தமிழுணர்வுக்குப் பொருந்திய அரசு அமைப்பும் தேவையாக விருந்தது. இத் தேவைகளையெல்லாம் நிறைவு செய்வதற்கான ஒரு சூழல் தமிழகத்தில் அமைந்தது.

## இ. அரசியல் மாற்றமும், தமிழ் வளர்ச்சி ஆக்கங்களும்

இனி, மறைமலையடிகளுக்குப்பின், மக்களுக்கிடையில் தமிழ் உணர்வே சிறிது காலம் வளர்ச்சியின்றியிருந்தது. ஏனெனில், மறைமலையடிகள் காலத்திலேயே இந்தித் திணிப்பு முயற்சி நடந்தது. அதன் பின்னர் நாடு விடுதலை பெற்றபின் அனைவரும் இந்தி படிக்கத் தொடங்கினர். எனவே, தமிழ் பற்றி எவரும் அக்கறை கொள்ளவில்லை. தமிழ்ப்புலவர்களும் திரவிட இயக்கத்தவர்களும் மட்டும் இந்தி வந்தால் தமிழ் அழிந்துபோகும் என்ற கவலையில் இந்தித் திணிப்புக்கு எதிராகக் கருத்தறிவித்துப் போராடி வந்தார்கள். பெரியாரும், பிற அரசியல் இயக்கங்களும் தீவிரமாகப் போராடிய நிலையில், இந்திப் திணிப்பு ஒருவாறு தணிந்திருந்தாலும், இந்தி என்றைக்கோ வந்துதான் தீரும் என்ற அச்சம் இருந்ததால், பெரும்பாலான மக்கள் இந்தியும் ஆங்கிலமுமே படிக்க விரும்பினர். இந் நிலை; அறிஞர் அண்ணா அவர்களின் திராவிட முன்னேற்றக் கழகம் 1967-இல் பதவிக்கு வரும் வரை நீடித்திருந்தது. தி. மு. க. பதவிக்கு வந்தபின் சென்னை, தமிழ்நாடானது (1969). இந்தித் திணிப்புக்கு ஒருவாறு முட்டுக்கட்டையிடப் பெற்றது. ஏற்கனவே இருந்த பேராயக்கட்சியரசு தமிழை ஆட்சி மொழியாக்கச் சட்டம் (1956) கொண்டு வந்திருந்ததைத் தி.மு.க. அரசு நல்ல முறையில் அழுத்தமாகச் செயற்படுத்தியது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்வளர்ச்சிக்கு நல்ல ஆக்கங்கள் ஏற்பட்டன. தி. மு. க. வைச் சேர்ந்தவர்களுக்கு இயல்பாகவே தமிழ்ப்பற்று மிக்கிருந்தது. அவர்களுக்கிருந்த ஆரிய எதிர்ப்புணர்வால் தமிழின, மொழி வளர்ச்சியில் அவர்கள் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டினர். வடமொழி வெறுப்புணர்வும் அவர்களுக்கிருந்ததால், அதிலுள்ள முன்னணித் தலைவர்கள் பலரும் தங்கள் பெயர்களைத் தூய தமிழில் மாற்றிக் கொண்டிருந்தனர். எனவே, இவர்கள் ஆட்சியமர்ந்த இந்தச் சூழ்நிலை தனித்தமிழ் இயக்க வளர்ச்சிக்கு மிக்க ஏற்றம் உடையதாக விருந்தது. அறிஞர்கள்

www.thamizham.net - Free E book No 7510

பலர் நல்ல நூலாக்க முயற்சியில் ஈடுபட்டனர். அரசியல் கட்சி சாராத நடுநிலையுணர்ச்சியுள்ளவர்கள் தமிழ் வளர்ச்சியில் மிகுதியும் ஈடுபட்டனர். தமிழ் பயிற்சிமொழி ஆக்கப்பட்டது (1970). உலகத் தமிழ் மாநாடுகள் மலேசியாவிலும் (1966), சென்னையிலும் (1968), பாரீசிலும் (1970) யாழ்ப்பாணத்திலும் (1974) நடந்தன. 'அரசு அதிகாரிகளின் பதவிப் பெயர்களெல்லாம் தமிழில் மாற்றப்பெற்றன. 'செகரடேரியட்' தலைமைச் செயலகம் ஆனது. 'ஆகாஷ்வாணி' வானொலி நிலையம் ஆனது. 'போலீஸ் ஸ்டேஷன்' 'காவல் நிலையம்' என்று பெயர் பெற்றது. சென்னையில் பல பகுதிப் பெயர்கள் நல்ல தமிழில் தெளிவாகவும் திருத்தமாகவும் வழங்கப் பெற்றன. பெயர்களுக்கு முன்னால் ஸ்ரீ போடுவதைத் தவிர்த்து, 'திரு' என்று போடுமாறு அரசு கட்டளை பிறப்பித்தது. 'தமிழ்நாடு டிரான்ஸ்போர்ட்' 'தமிழ்நாடு போக்குவரத்துக் கழக'மாக மாறியது. சென்னை 'சங்கீத நாடக சபா' 'தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம்' ஆனது. பொதுப் புழக்கச் சொற்கள் பல தமிழில் கொணரப் பெற்றன. அவற்றுள் கீழே சில சொற்கள் எடுத்துக் காட்டுக்காகத் தரப்பெறுகின்றன.

| | |
|---|---|
| Manager — மேலாளர் | Supervisor — மேற்பார்வையாளர் |
| File — கோப்பு | Typewriter — தட்டச்சுப்பொறி. |
| Inspector — ஆய்வாளர் | Casual Leave — நேர்ச்சிவிடுப்பு. |
| Examiner — தேர்வாளர் | Moore Market — மூர் அங்காடி. |
| Driver — ஓட்டுநர் | Conductor — நடத்துநர் |
| Tender—ஒப்பந்தப்புள்ளி | Quatation — விலைப்புள்ளி. |
| Election — தேர்தல் | Bus — பேருந்து |
| Assistant — உதவியாளர் | Engineer — பொறியாளர் |
| Transport—போக்குவரத்து | Nomination — வேட்பு |
| Department — துறை | Record — ஆவணம் |

Secretary to govt. — அரசுச்செயலர்.
Super Market — சிறப்பங்காடி, பேரங்காடி.
Telephone exchange — தொலைபேசித் தொடர்பகம்
Post office — அஞ்சலகம் (தபாலாபீஸ் போனது)
Employment Exchange — வேலை வாய்ப்பகம்
Superintendent — கண்காணிப்பாளர்

இவைபோல் நூற்றுக்கணக்கான தூயதமிழ்ச் சொற்கள் ஆட்சி வளம் பெற்றன. இதனால் மக்களிடையில் மெல்ல மெல்ல நல்ல தமிழுணர்வு வீறுபெற்றது. அடங்கிக் கிடந்த இந்தித் திணிப்பு முயற்சிகள் நடுவணரசின் மாறுபட்ட போக்கால் மீண்டும் தலை-யெடுத்த பொழுது, 1965-ஆம் ஆண்டு பொதுமக்கள் சார்பில் தமிழ் மொழி காக்கக் கிளர்ந்தெழுந்த பெரும் போராட்டமே இதற்குச் சான்றாகும். இந்த விளைவுகளுக்கெல்லாம் அடிப்படையாக 1959-இறுதியிலேயே முற்றும் தனித்தமிழ் வளர்ச்சிக்கெனவே தோன்றி-

www.thamizham.net - Free E book No 7510

யிருந்த தென்மொழி இயக்கம் ஒரு பெருங்காரணியமாகும். எனவே, அவ்வியக்கம் பற்றிச் சில நிலைகளைச் சுருக்கமாகவேனும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். (விரிவான விளக்கத்தை முன்னர் குறிப்பிடப் பெற்ற நூலிற் காண்க).

### ஈ. தென்மொழி இயக்க முயற்சிகள் :

தூய தமிழ் வளர்ச்சியில், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடான 'செந்தமிழ்ச் செல்வி'யினதும், கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடான 'தமிழ்ப்பொழி'லினதும் பங்கு பேரளவில் இருந்ததேனும், இவ்விரண்டு இதழ்களும் புலவர்கள் நடுவிலேயே புழக்கம் கொண்டிருந்தன. பொது மக்களிடையில் அவற்றிற் கீடுபாடில்லை. எண்ணிக்கையிலும் அவை ஆயிரத்துக்கும் குறைவான படிகளே அச்சிடப் பெற்றன. அடிகளாரின் 'அறிவுக்கடல்' அக்காலத்தில் நூற்றைம்பதுக்கும் குறைவான படிகளே வெளியிடப் பெற்றன. மேலும், 'செல்வியும்,' பொழிலும்' இலக்கிய இலக்கண வாழ்வியல் துறைகளைப் பற்றியே கருத்துச் செலுத்தின. அறிவியல் துறையில் கோவைக் 'கலைக்கதிர்' ஒன்று மட்டுமே தமிழுக்குழைத்தது. எனினும் இம் மூன்றிலும் முழுக்கவும் தனித்தமிழ் கையாளப் பெறவில்லை. ஆண்டுப் பெயர்கள், மாதப் பெயர்கள், பட்டப்பெயர்கள், தலையெழுத்துகள், முதலியனவும் இடையிடையில் பல சொற்களும் வடசொற்களாகவே இருந்தன.

இந்நிலையில், 1959-ஆம் ஆண்டு இறுதியில் முற்றும் தனித்தமிழுக்கென்றே '**தென்மொழி**' என்ற தூய தனித்தமிழிதழ் நெல்லிக்குப்பத்தில் **பெருஞ்சித்திரனாரால்,** தொடங்கப்பெற்றது. ஈராண்டுகளுக்குப்பின் அது கடலூருக்கு மாற்றப்பெற்றது. ஆசிரியர் நடுவணரசுப் பணியிலிருந்து கொண்டே அவ்விதழை வெளிப்படுத்தியதால், பலவகை இடர்ப்பாடுகளுக்கும் இடையில் அது நின்று நின்று வந்து கொண்டிருந்தது. 1962-இலிருந்து இன்றுகாறும் அதன் இயக்கம் செப்பமுற்றது. அதன் பேரளவு எண்ணிக்கை ஐயாயிரம். பின் பலவாறான இழப்புகளுக்கிடையிலும் அரசுத்துறை நடவடிக்கையினாலும் அதன் எண்ணிக்கை ஈராயிரமாகக் குறைந்தது. அவ்விதழ் தாளிகைத் துறைகளிலும் தனித்தமிழ் வளர்ச்சித் துறையிலும் பெரும் பணி செய்தது. வெளிநாட்டிலும் அதற்குப் பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் இருந்தனர். தென்மொழிக்கு மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா, பிரான்சு, இங்கிலாந்து, இலங்கை, தென்னாப்பிரிக்கா முதலிய பல நாடுகளில் உறுப்பினர்கள் அமைந்தனர். 1967-இல் அவ்விதழோடு '**தமிழ்ச்சிட்டு**' என்னும் சிறுவர் இதழும் அச்சிடப் பெற்று வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவ்விதழால் மாணவர்களுக்கிடையிலும் ஆசிரியர்களுக்கிடையிலும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. ஆயிரக்கணக்கான மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கள் பெயர்களைத் தனித்தமிழ்ப் பெயர்களாக

www.thamizham.net - Free E book No 7510

வைத்துக்கொண்டனர்; பேச்சிலும் எழுத்திலும் தூய தமிழ் நடையைக் கையாண்டனர். நாளடைவில் தென்மொழி ஓர் இயக்கமாகவே இயங்கியது. தென்மொழி படிப்பவர்கள் ஆங்காங்கே ஒன்றுகூடி இணைந்து ஓர் இயக்கமாகவே செயல்பட்டனர். 1965-இல் நடந்த இந்தியெதிர்ப்பில் தென்மொழி பெரும்பங்கு ஆற்றியது. அதன் காரணியமாக அதன் ஆசிரியர் இரண்டு மாதம் சிறையிடப் பெற்றார். அதன் பொருட்டு அவர் அரசுப் பணியினின்று நீக்கப்பெற்று, முழு நேரமும் தனித்தமிழ் வளர்ச்சிப் பணிகளிலேயே ஈடுபட்டார். தென்மொழியில் இலக்கண இலக்கியக்கட்டுரைகள் மட்டுமன்றி, அறிவியல் கட்டுரைகள் ஏராளமாக வெளிவந்தன. அறிவியல் ஆசிரியர்களும் மாணவர்களும் அத்துறைச்சொற்களைத் தூயதமிழில் மொழி பெயர்த்துக் கட்டுரைகள் எழுதினர். வெறும் மொழிவிடுதலைக்கு மட்டும் அவ்விதழ் பாடுபடாது இனவிடுதலைக்கும் தமிழ்நாட்டு விடுதலைக்கும் அது பாடற்றியது. மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணரின் கட்டுரைகளைத் தென்மொழி தொடர்ந்து வெளியிட்டது. அவரைப் பற்றியும் அவர் ஆராய்ச்சித் திறனைப்பற்றியும் மக்களுக்கு முறையாக வெளிப்படுத்தியது தென்மொழியே எனின் அது மிகையாகாது. பாவாணர் மொழியாராய்ச்சி தடைப்படக் கூடாது என்பதற்காகப் பொருட்கொடைத் திட்டத்தின் வழி ஒரு கணிசமான தொகையைத் திரட்டி (1963-இல்) நன்கொடையாகத் தந்தது. அவரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியீட்டுக்கென், நிறைவான திட்டம் ஒன்றைத் தீட்டி, அவருக்குத் தொடர்ந்து பொருள் வரும்படி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. பின்னர் அத்திட்டம் அன்றிருந்த தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப் பெற்றது. பாவேந்தர் குடும்பம் அரசினரால் கவனிக்கப் பெறுமலிருந்த பொழுது, தென்மொழி அக்குடும்பத்திற்கும் ஒரு பெருந்தொகை நன்கொடையாகத் திரட்டியளித்தது (1967-68). முன்னைய இந்தியெதிர்ப்பு மறவர் ஈழத்தடிகளின் இறுதிக் காலத்தில் தென்மொழி அவருக்கும் ஓரளவு நன்கொடை திரட்டியளித்தது.(1969-70)

(தொடரும்)

---


**'தென்மொழி' சென்னை-5**

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம்: | 15 உருபா | 35 உருபா | 35 ,, |
| அரையாண்டுக் கட்டணம்: | 8 ,, | 18 ,, | 18 ,, |
| தனியிதழ்: | 1.25 ,, | 3 ,, | 3 ,, |

ஓரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.


www.thamizham.net - Free E book No 7510

# உரைவேந்தர் நிறை தமிழ்த் தொண்டு !

தி. நா. அறிவுஒளி, க. மு., கல். இ.,

சில ஆண்டுகளுக்கு முன் நானும் அறிஞர் ஔவை. நடராசன் அவர்களும் வடலூர் சென்றோம். அங்கே வள்ளலார் விழா நிகழ விருந்தது. தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுடன் நானும் ஔவை. நடராசன் அவர்களும் திருச்சியிலிருந்து மகிழுந்தில் வடலூர் சென்றடைந்தோம்

சற்று நேரங்கழித்துப் பொள்ளாச்சியிலிருந்து பேரறிஞர் உரை வேந்தர் ஔவை துரைசாமியார் அவர்கள் ஒரு மகிழுந்திலிருந்து வந்திறங்கினார்.

திரு. நடராசன் தம் தந்தையாரை எதிர்பார்க்காததால் வியப் புற்றார். அவரை யாவரும் வரவேற்றோம். திறந்த வெளியில் நாற் காலியில் அமர்ந்து அளவளாவினோம்.

"என்னப்பா திடீரென வந்தீர்கள் ?"

"தம்பி, திருஅருட்பாஉரை எழுதுவதில் சிறிது தடை உண்டா யிற்று. வடலூர் சென்று மெய்யறிவு மன்றில் வழிபட்டால் பொருள் புலப்படுமென எண்ணிப் புறப்பட்டேன்; வந்தேன். என்னுடன் யாராவது வந்தால் நல்லது. ஓர் அருட்பா நூல் கிடைக்குமா?"

'அறிவு ஒளி உங்களுடன் வருவார். அருட்பா தருவிக்கிறேன்."

உடனே ஒருவரைக் கேட்டு அருட்பா நூல் கொண்டுவரச் செய்து என்னிடம் கொடுத்தார். நான் உரைவேந்தருடன் மெய்யறிவு மன்றத் திற்குச் சென்றேன். (சத்திய ஞானசபை)

ஆழ்ந்த ஆய்வில் மூழ்கியவராக வந்த ஔவை துரைசாமியார் மெய்யறிவு மன்றினை வலம் வந்தார். ஓரிடத்தில் நிழலில் அமர்ந் தார். என்னை முன்னரே அறிந்தவர்தான். ஆயினும் மீண்டும் என்னைக் குறித்து வினவினார். நான் யாரெனக் கூறியதும் புரிந்து கொண்டார்.

உரைவேந்தரின் எழுபதாம் அகவை நிறைவு விழா சென்னையில் கிறித்துவ இளைஞர் கழக பட்டி மன்றத்தில் கொண்டாடப் பெற்றது. அப்போது ஔவை துரைசாமியாரின் வாழ்க்கைக் குறிப்பினை நான் எழுதி, அது சிறு நூலாக வெளியிடப்பட்டது. அதுகாலை சட்ட மன்ற அவைத்தலைவராக விருந்த புலவர் கோவிந்தன் அவர்கள் அந் நூலை வெளியிட்டார்.

இதனை நினைவூட்டியதும் புரிந்து கொண்டார். அருட்பாவில் குறிப்பிட்ட சில பாக்களைப் பொருளுணர்ச்சி பொலியுமாறு பாடிக் காட்டுமாறு கட்டளையிட்டார். அவ்வாறே படித்தேன்.

கேட்டவர் மீண்டும் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார். சிறிது நேரம் கழிந்தது.

www.thamizham.net - Free E book No 7510

"உம். புறப்படு போகலாம். அந்தப் பாடல்களுக்குரிய விளக்கம் புலப்பட்டு விட்டது. உடனே எழுதி விட வேண்டும். உம்..." என ஔவை துரைசாமியார் பரபரத்தார்.

மீண்டும் தங்குமிடம் மீண்டோம். திரு. ஔவை நடராசனை விளித்து, "*நான் 'உரை கூற' ஒருவர் எழுத வேண்டுமே! பயிற்சியுள்ளவர் எழுதினால் நல்லது." என்றார்

திரு. நடராசன் அவர்கள், "நம் அறிவுஒளி எழுதுவார்". எனக் கூறி என்னை அவர் கூறுவதை எழுதுமாறு தூண்டியனுப்பினார்.

நானும் பெறற்கரும்பேறு எனக்கருதி உரைவேந்தரின் தனியிருப்பிடம் சென்றேன். அவர் பாயில் அமர்ந்து கொண்டார். ஒரு சாய்பலகை மீது தாளை வைத்துக் கொண்டு அவர் எதிரில் அமர்ந்தேன்.

மூன்றாந்திருமுறையில் ஒரு பாடலைப் படிக்கச் சொல்லிக்கேட்டு உடனே உரை கூறினார். விளக்கம், இலக்கணக் குறிப்புகள், தக்க ஒப்புப் பகுதிகள், மேற்கோள், சிவனிய கொண்முடிபுக் கருத்துகள் சொற்-பொருள் நயங்கள் என மிக அழகாக ஆற்றொழுக்காகக் கூறி வந்தார். நானும் முறைப்படி எழுதினேன்.

அவர், அகலம் குறைவாக விருக்கும் நீளமான வீச்சுத்தாளில் உரையெழுதும் வழக்க முடையவர்.

அதில் மடித்து மடித்து எழுதுவதும் எனக்கொரு புதுமை!

மூன்று நான்கு பாடல்களுக்குப் பலபக்கங்களில் உரை விளக்கம் விரிந்து பரந்திருந்தது.

எழுதி முடித்ததும் அவரை வினாக்கள் கேட்டேன்.

"உரையாசிரியர்களுள் யார் முறையைச் சிறப்பான தெனக் கருதுகிறீர்கள்?"

"உரையாசிரியர் ஒவ்வொருவரும் சிறந்தோர்; அவரவர் முறைகளும் உயர்ந்தவை. ஆனால், திருவருட்பா உரையை எழுதப் பரிமேலழகர் உரைமுறையையே நான் கையாள்கிறேன். அவர் உரையே கூட இலக்கியமாகிறதல்லவா? திட்பமும் நுட்பமும் உரையில் செறிய அருமையாக உரைவரையுங்கலை அவருக்குரியது."

"அருட்பா பாடல்கள் எளியவை என்று நான் இதுவரை எண்ணியிருந்தேன். உங்கள் உரை வளத்தைப் பார்த்தால் அருட்பா அரும் பாவாக அல்லவா தெரிகிறது?"

---

*பல்லாயிரக் கணக்கான பக்கங்கள் எழுதி எழுதி ஔவை துரைசாமியாரின் கை நனி தளர்ச்சியுற்றதாலும், நரம்புகள் தளர்ந்ததாலும் அவர் கைகள் நடுங்கின. அதனால் எழுதுவதற்குப் பிறர் உதவியை எதிர்பார்க்கும் நிலையமைந்தது. அருட்பா உரையின் பெரும்பகுதி வாய்மொழியாகக் கூறி எழுதுவித்ததுதான்.

www.thamizham.net - Free E book No 7510

"இளமையில் நானும் அருட்பாவை எளியன என்றே எண்ணினேன். ஆனால், உரையெழுத முற்பட்ட பின்னர்தான் அருட்பாவின் அருமையும் நுட்பமும் செறிவும் புலனாயிற்று. அதனால் என் எண்ணமும் மாறியது. பொதுநோக்குக்கு எளியதாயும் சிறப்பு நோக்குக்கு அரியதாயும் அமைவதுதானே அருட்பாடல்களின் உயர் மதிப்புக்கு இலக்கணம்?"

"உண்மை ஐயா. வள்ளலார் பாடல்கள் முற்காலப் பகுதியினவற்றை விடப் பிற்காலப் பகுதிப் பாடல்கள் சிறந்தன வல்லவா?"

"ஆம். அப்படித்தான் உள்ளன. இளமையில் புராணம் முதலியவற்றைப் போற்றிப்பாடும் தன்மையிலிருந்து வளர்ந்து பொதுமை யுணர்வும் சமயப் பொதுநிலையும் உயர்மெய்யறிவு நிலையும் அமைந்த பாக்களைப் பிற்காலத்தில் பாடியுள்ளார்."

"நால்வர் பாக்களிலிருந்து பிழிவெடுத்துப்பாடினாற்போல் அருட்பா அமைந்துள்ளதன்றோ?

"அதுவும் உண்மை. நால்வரையும் தம் குரவர்களாக வள்ளலார் கருதியுள்ளார்; வழிபட்டுள்ளார். நால்வர் பனுவல்களில் படித்துப் சுவைத்துச் சுவைத்து ஊறி அமிழ்ந்துருகியுள்ளார். அவர் கல்வி மாட்சி அருட்பாவில் புலப்படுவது இயல்பே. ஆனால், அவர்களிலிருந்து வள்ளலார் வளர்ந்து சிறந்திருக்குமிடமும் தனித்துக் குறித்துக் காட்டுதல் வேண்டும். பொதுநோக்கு, தூய நன்னெறி, சாகாக்கலை ஆகியன வள்ளலாரின் தனிச்சிறப்புக்குரியன. வள்ளலார் எதிர்கால நோக்குடன் பல சமய உண்மைகளையும் உள்ளடக்கிய புதுமைச் சித்தர். மரபு நெறி பரப்ப விரும்பினார்."

பல்வேறு உரையாசிரியர்களின் உரைநுட்பங்களும் தமிழ் மரபின் திட்ப ஒட்பங்களும் குறித்து உரை வேந்தர் விளக்கினார். பல பாடல்களை மிக எளிதாக நினைவிலிருந்து அப்படியே நினைவு கூர்ந்து காட்டியமை என்னை வியப்பிலாழ்த்தியது.

நான் எழுதிய தாள்களை வாங்கிப் படித்துப் பார்த்தார் உரை வேந்தர்.

"இதற்குமுன் எந்த நூலுக்காவது உரை எழுதியிருக்கிறாயா தம்பி?"

"இல்லை. நான் உரை எழுதியதில்லை."

"ஊஉம். உரை எழுதிய பழக்கமில்லாமல் இந்த முறையோடு கூடிய உரைவரைதல் எளிதல்லவே..."

"உங்கள் உரைகளைப் படித்ததன் விளைவாக, அதனைப்பின் பற்றி எழுதினேன். அவ்வளவு தான்."

உடனே அருமை அன்பர் ஔவை. நடராசனை அழைத்தார்.

"தம்பி, இந்தத் தம்பியை என்னோடு பொள்ளாச்சிக்கு அழைத்துச் செல்கிறேன். ஒரு திங்கள் கூட இருந்து நான் சொல்லும் உரையை

www.thamizham.net - Free E book No 7510

எழுதட்டுமே? வேறு சிலர் எழுதுகிறார்கள். நான் வேறு திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இவர் உணவு முதலிய எல்லா வாய்ப்புகளையும் நான் ஏற்பாடு செய்தளிப்பேன்." எனக் கூறி என்னை நோக்கித் தம்முடன் வருமாறு அழைத்தார்.

பல்வகைச் சூழ் நிலைகளுக்கு அடிமையாயிருக்கும் நான் அவருடன் செல்லவியலுமா? வரவியலாமையை வருத்தத்துடன் உணர்த்தினேன். ஒரு பேரறிஞரின் உரை வகுக்கும் பெரும் பணிக்கு உறுதுணையாயமையும் பெருவாய்ப் பரிதினும் அரிதாயிருக்க, அதனை ஏற்கவியலா நிலையினை அன்றும் இன்றும் எண்ணி நோகின்றதென் நெஞ்சம்.

அப்போது அவருடன் உரையாடியபோது பல அரிய கருத்துகளையும், தமிழ் நுட்பங்களையும் உணர்த்தினார் உரைவேந்தர்.

பேராசிரியர் ஔவை அவர்களின் ஐங்குறு நூறு உரை-நயம்-நலங்குறித்துப் பாராட்டினேன். அவர் அதன் பின்னணியில் இருந்த ஒரு வரலாற்று வாழ்க்கைக் குறிப்பைக் கூறியருளினார்.

ஔவை துரைசாமியார் அவாகள் அரும்பெரும் கழக இலக்கியமாகிய ஐங்குறுநூற்றுக்கு அரிய ஆய்வுரை எழுதி வெளியிட விருக்கிறார் என்னுஞ் செய்தி யறிந்தார் பர். உ. வே. சா.

உ. வே. சா. அவர்கள் ஐங்குறுநூற்றினை ஓலையினின்றும் அச்சிற் பழைய குறிப்புரையுடன் பதிப்பித்தவர். ஆதலின் அவர், ஔவை. துரைசாமியார் மீது வழக்குத் தொடரமுனைந்தார். அவர் தம் மீது வழக்கு எடுக்கக் கருதியதையறிந்த உரைவேந்தர் தம் சார்பில் வழக்குரைஞராக அமையுமாறு அந்நாள் தமிழ்க் காவலரும் தமிழினத் தானைத் தலைவருமாயிருந்த திரு. ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர்களை வேண்டினார். தமிழர் நலனுக்குழைப்பதையே வாழ்நாட் பணியாகக் கொண்டிருந்த பன்னீர்ச் செல்வம் அவர்களும் இசைந்தார்.

திரு. பன்னீர்ச் செல்வம் அவர்கள் ஔவையின் வழக்குரைஞராக அமைகிறார் என்னுஞ் செய்தி பர். உ. வே. சா. அவர்கட்கு எட்டியது. அவர் உடனே தாம் எடுத்திருந்த வழக்கு தொடரும் முயற்சியினைக் கைநெகிழவிட்டார்.

உரைவேந்தரின் ஐங்குறுநூற்று உரையினையும் உ. வே. சா அவர்கள் உரைப்பதிப்பினையும் ஒப்பிட்டுக் கற்போர் உரைவேந்தர் உரைவளக்கலை மாட்சியினையும், அவரது உழைப்பருமையையும் நன்கு அறிவர்.

பழம் பதிப்பில் 207 பக்கங்களே உள. பேராசிரியர் ஔவை உரை 1003 பக்கங்கள் அளவு பெரியது. அளவால் மட்டுமன்று ஆய்வால், விளக்கத்தால் நுண்ணிய உரை நலத்தாலும் பெரியதும் அரியதுமாகும். பல்வேறு சுவடிகளை ஒப்பிட்டாய்ந்து வகுத்த இப்

www.thamizham.net - Free E book No 7510

புத்துரை முயற்சியைத் தடுக்க முனைந்தமையை எவ்வகைக் காழ்ப் புணர்வுமின்றிக் கூறிய ஒளவை அவர்கள், உ. வே. சா. ஒரு முறை ஒளவை. அவர்களின் புலமையாற்றலை யுணர்ந்து 'பண்டைத் தண்டமிழ் நூல்களுக்கு உரை வரைக' என ஆர்வமூட்டிய செய்தியையும் கூறினர்.

திண்டிவனம் அ. ஆ. மி. உயர் நிலைப்பள்ளியில் தமிழாசிரியரா யிருந்த சீகாழி, உயர்திரு. கோவிந்தசாமி (இரெட்டியார்) அவர்களிடம் ஒளவை அவர்கள் தமிழ் பயின்றார். திரு. கோவிந்தசாமியாரிடமிருந்த ஐங்குறுநூறு ஓலைச் சுவடியில், கி. பி. 1903-இல் அச்சிடப்பட்ட ஐங்குறுநூறு பதிப்பிற் காணக் கிடைக்காத பாட வேறுபாடுகளும், குறிப்புகளும் இருக்கக் கண்டார் ஒளவை. ஆகவே அந்நூலை யாவருந்தெளியக் கற்கக் கருதியே புத்துரை எழுத எண்ணங் கொண்டார்.

இந்நிலையில்.ஐங்குறு நூற்றினைப் பாடங்கேட்க இரு மாணுக்கர் ஒளவையை வேண்டினர். அவர்கட்கு ஐங்குறுநூற்றின் முதல் நூறான 'மருதம்' பகுதியைக் கற்பித்தார். அப்பகுதிக்கு உரையெழுதினர். அந்நூல் 1938-இல் 'ஐங்குறு நூறு மருதம் மூலமும் விளக்கவுரையும்' என்னும் பெயர் பெற்று அச்சில் வெளிவந்தது. அந் நூலைக் கற்றதன் மாண்பினை யுணர்ந்த தமிழவேள். திரு. த. வே. உமாமகேசுவரம்(பிள்ளை) அவர்கள் முயற்சியால் திருப்பனந்தாள் காசிமடம் அடிகளார் நூல் எழுதி முடிக்கத் தூண்டினார்கள். விளக்கவுரை எழுதி முடித்தார். அஃது அச்சில் வர இயலவில்லை. 'பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு வேண்டுகோள் விடுத்தார் ஒளவை. அப்பல்கலைக் கழக வெளியீடாக மாவிவு விலையில் ஐங்குறு நூறு வெளிவந்தது. (9-9-1957-இல் முதற்பதிப்புக்கு முன்னுரை எழுதியுள்ளார்.)

"இனி இந்நூல் உரையினையும் முன்னுரையையும் நோக்குமிடத்து இறைச்சிப் பொருள் காட்டியது வியப்புப் படக்கும். முன்னுரைக் கண் காணப்படும் ஆராய்ச்சி, உரை முடிந்த பல்லாண்டுகட்குப்பின்பு நிகழ்ந்ததென்பது அறிஞர் உலகுக்கு இதனால் தெரிவித்துக் கொள்ளப் படுகிறது" என 20-10-1958-இல் புறவுரையில் உரை வேந்தர் எழுதிய குறிப்பும் காணத்தக்கது.

ஐங்குறு நூற்றின் முதல் நூறு பாக்களுக்கு அமைந்துள்ள உரைக்கு நிகராக வேறு நூலுரைப் பகுதி அமைந்தில எனலாம். பக்கம் மிகுமெனும் அச்சத்தால் ஏனைய நானூறுபாக்களுக்குச் சுருக்கமாகவே உரை எழுதியுள்ளார் ஒளவை அவர்கள்.

இதுபோன்றே நற்றிணை விளக்கவுரையின் சீர்மையும் வியத்தற் குரியதேயாகும். புலவர்கள் இரும்புக் கடலை போலும் பாடல்களால் ஆன நூல்கள் என்று கூறும் பதிற்றுப்பத்துக்கும் ஞானமிர்தத்

www.thamizham.net - Free E book No 7510

துக்கும் அருமையான உரைவரைந்தருளினூர்.

சமண இலக்கியமான யசோதர காவியத்துக்கு அரிய உரை வகுத்தருளினூர் ஔவை.

புறநானூற்றுக்கு ஔவை வரைந்த உரையும், ஆய்வு விளக்கமும் எதிர்கால உரையாசிரியர்களுக்கு உரை இலக்கணமாகத் திகழும் பெற்றி சான்றதாகும்.

தமிழக ஊர்ப் பெயர் வரலாற்று நூலும் திருவருட் பா உரையும் ஔவையவர்கள் தமிழினத்துக்கு அருளிய அறிவுக் களஞ்சியங்கள் ஆகும். இவ்விருநூல்களும் இன்னும் அச்சிட்டு வெளியாகமல் இருப்பது வருந்தத் தக்கதாகும். ஆன்ற தமிழறிஞர்களைப் பெற்ற தமிழகம் அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, அன்னூர் அறிவு நலனை முழுதும் துய்க்காமல் அறியாமையுள்ளாழ்ந்து கிடந்து பழிசுமக்கிறதே என என்னெஞ்சம் அலமருகிறது.

இவ்வாண்டு எத்துணைத் தமிழ்ப் பெரியார்களை மறைத்து விட்டது! மொழிஞாயிறு பாவாணர் அவர்கள், ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமியார், திருக்குறள்பீடம் அழகரடிகளார், முதலியோர் இழப்புடன் உரைவேந்தரும் மறைந்தமை ஈடு செய்ய வியலாத பேரிழப்பாகும். இந்த இழப்புகளின் தன்மையறியாது தமிழினம் 'வெறி கொண்ட குரங்கு' போல வறிதே மகிழ்ந்து திரிவதைக் காணுங்கால் நெஞ்சிற் செங்குருதி வெள்ளம் பெருக்கெடுக்கிறது.

ஔவை துரைசாமியாரின் உரைநடையில் பண்பட்ட கல்வியாற்றலால் கனிந்த ஒரு நயமார்ந்த கனிவும் ஆற்றொழுக்கும் அமைந்திருக்கும். இவரது பேச்சு நடையும் எழுத்து நடையும் ஒரே தன்மையாயிருப்பதை யறியலாம். செப்பமும் தெளிவும் கருத்துச் செறிவுங் கனிந்த பழுத்த புலமைநலந்துளும்பும் ஔவையின் உரை நடை நலம் எண்ணி மகிழவும் கற்றின்புறவும் தக்கது. அவர் உரைநடையில் செய்யுளில் அமைந்துள்ளது போலும் இழுமென்னேசை யொழுங்கும் அமைந்திருக்கும். அவ்வினிமையைத் துய்ப்பதற்காகவே இவர் உரை நடைகளை வாய்விட்டு உரக்கப்படித்து மகிழ்வது என் வழக்கமாகும்.

மரபுவழிப்புலவர் ஔவையவர்கள் திட்ட வட்டமான குறிக்கோளுடையவர். அவர் கொள்கையிற் பிடிப்புடன் உறுதியாகத் திகழ்ந்தவர். பட்டம், பதவி, ஆரவாரம் முதலியவற்றுக்கு ஆவல் கொள்ளாத துறவி ஔவையவர்கள். அவர் உரைகள் ஒவ்வொன்றுக்குமே பல பண்டாரகர் பட்டம் வழங்கியிருக்கலாம்! நம் பல்கலைக் கழகங்கள் தக்காரை மதிக்குந்தகுதியை எப்போது எய்துமோ; அறிகிலேன்! பாடகர், நடிகர்கட்கு கெல்லாம் பண்டாரகர் பட்டம்

www.thamizham.net - Free E book No 7510

வழங்குவதற்கு 'அறிவு' பெற்றுள்ள பல்கலைக் கழகங்கள் 'புலமை நலச் சான்றோர்க்கு' வழங்கத்தவறும் மறதி உண்மையில் திறமையான மறதியே!' திறமையை மதித்து அறிவுடையோர் அளித்த 'உரைவேந்தர்' பட்டமும், 'அறிவு கொண்முடிபுக் கலைச் செல்வர்' (சித்தாந்த கலாநிதி) சிறப்புப் பெயரும் நனிபோற்றற்குரியனவாகும்.

அறிவும் பண்பும் உணர்வும் ஊட்டவேண்டுங்கடமையே புலவர் தம் தலையாய கடமையாகும். இந்நாள் புலவர்கள் இடிக்குங்கேளிராக அமைந்து உணர்ச்சியூட்டவேண்டுங் கடப்பாடும் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வியல்பு நம் உரைவேந்தரிடத்து முழுமையாக அமைந்திருந்தது. அவரது உரைப் பகுதிகளுக்கிடையே கருமுகிற் றிரளிடைப் பிறழ்ந் தொளிரும் பொன் மின்னலெனா அருங்கருத்துகளுக்கிடையே உணர்ச்சி மின்னல்கள் அறியாரைச் சவட்டும்!

ஐங்குறு நூற்றுரையில் 'சிறு வெண் காக்கைப் பத்து' (Little Cormorant) என்னுந் தலைப்புக்கு விளக்கம் எழுதியுள்ளார். உயிரியல் - பறவையியலறிஞர் ஆய்வு எனத்தக்க உரை வரைந்தபின்,— இவற்றின் இயல்புகள் நமக்கு ஏன் இயற்கையாகத் தெரியவில்லை? **நம் நாட்டுக் கல்விமுறை, நம்மைச் சூழவுள்ள மரம், செடி, கொடி, புல், பூடு, பறவை, விலங்கு முதலியவற்றையும் அவற்றின் இயல்புகளையும் கண்டறிந்து நமது நாட்டுக்கே உரிய நினைவும் செயலும் உடையராக்காது வெளிநாட்டினின்றும் போந்து வாழ்க்கை நடத்தும் மக்களினத்தாரைப்போல மாற்றி விட்டது; அதனால் சங்க காலச் சான்றோர் பாட்டுகள் கூறும் மாவும் புள்ளும் மரமும் செடியும் ஊரும் நாடும் ஒழுகலாறும் பிறவும் இந்நாளைய நமக்கு மிக்க வியப்பாக இருக்கின்றன; நம் முன்னோர்களான சங்கச் சான்றோர்களின் பெயர்களைக் கண்டு பெருமிதம் கொள்ள வேண்டிய நமது உள்ளம், எள்ளி நகையாடுமளவுக்கு இழிந்து விட்டதெனின் வேறு கூறுவது என்னை? இன்றுள்ள கல்வித் துறைத் தலைவர்களும் கல்வியாளர்களும் தமிழ்ச் சிறுவர்களைப் பிறர்க்கே யுழைத்து ஏழையாகும் பேதைகளாக்கும் நெறியில் தம்மையறியாமலே கல்வி நெறியை வகுத்து வந்துள்ளனர். தமிழ்நாட்டுக்குரிய பண்பாடு, பொருளறிவு, சமுதாய வரலாற்றறிவு, முதலிய நெறிகளில் தமிழ்ச் சிறுவர் உள்ளமும் உரையும் இயலுமாறு செய்யும் நாளே தமிழ் மக்களைத் தமிழ் நாட்டுக்கு உரிய தமிழ் மக்களாக்கும் நன்னாளாகும். அக்காலத்தே சங்க இலக்கியங்களின் இயற்கை அறிவு நலமும் பிறவும் பேரறிவும் பேரின்பமும் நல்கிப் பீடுபெறச் செய்யும் என்பது ஒருதலை."**

(ஐங்குறு : ப : 374-375)

இவருக்குக் கல்வெட்டு ஆய்வும் வரலாற்றாய்வும் இரு கண்மணிகளாயமைவனவாம். இலக்கிய ஆய்வுக்கு இவ்விருதுறைப் பேரறிவு நனி இன்றியமையாதது எனக் கூறவும் வேண்டுமா?

www.thamizham.net - Free E book No 7510

தமது உரைப் பகுதிகளில் ஆங்காங்கு ஔவை அவர்கள் அருமையான ஆராய்ச்சி முத்துகளைப் பதித்து எழுதுவார்.

'தொண்டிப் பத்து' என்னும் பகுதியின் விளக்கவுரை மாட்சியை அறிவது தகும். தொண்டி சேர நாட்டின் கண் சிறப்புற்ற நகரமாகும். அந்நாளில் தொண்டி என வழங்கிய இடம் யாது என ஆராய்ந்துரைக்கிறார் ஔவை.

"சேர நாட்டின் வடபகுதி குடநாடு எனவும், தென்பகுதி குட்ட நாடு எனவும் விளங்கினமையின், குட நாட்டுக்குத் தொண்டி நகரமும், குட்டநாட்டுக்கு வஞ்சியும் சிறப்புற்றன. பின்னர், குடநாட்டுப் பிரிவுகளுள் ஒன்றான பொறைநாட்டுக்கும் தொண்டியே தலைநகரமாயிற்று. இஃது இப்போது குறும்பொறை நாட்டுப் பகுதியில் ஒரு சிற்றூராய்க் காட்சியளிக்கிறது. சிலர், இப்போது கடலுண்டி என வழங்கும் பகுதியே பண்டைத் தொண்டியாகலாம் எனக் கருதுகின்றனர். இதன் பழம் பெயர் மண்ணூர் என்று அங்குள்ள **கல்வெட்டு கூறுவதை அவர்கள் அறியாமையாலும், இவ்வூரையும் அவர்கள் நேரிற் சென்று காணாமையாலும் தொண்டி எனத்தவறாகக் கூறி விட்டனர் என அறிதல் வேண்டும்.** (ஐங்குறு : உரை : ப : 392)

மேலும் எழுதுகிறார் : "பண்டையில் குடக்கோ வேந்தர்க்கும், இடையில் இரும்பொறை வழியினர்க்கும், பின்னர் கோதை மன்னர்க்கும் உரிமையுற்றிருந்த தொண்டி நகரம், இவர்கட்குப் பின்னர்ப் போந்த கடம்பர், பங்களர் முதலியோர்களால் வளமிழந்து மெலிவுற்றது. வடவாரியரும் மேலை நாட்டுப் பல்வேறு யவனரும் சோனகரும் பிறரும் வந்து கலந்து **மேலைக்கடற்கரையில் வாழ்ந்த தமிழினத்தைக் கேரளராகத் திரித்து, அவரது தாய்மொழியாகிய தமிழையும் கேரள மொழியாகத் திரித்தனர். இத்திரிபின் பயனைப் பண்டைச் சேர மன்னர்க்குரிய** தொண்டியும், வஞ்சியும், முசிறியும், கருவூரும், நறவூரும், மாந்தையும் சிற்றூர்களாய்ச் சிறப்பிழந்து போயின. **கடுகு சிறுத்தாலும் அதன் காரம் குன்றுவதில்லை.** என்பது போல இவ்வூர்கள் பண்டைப் பெருமை குன்றிலும் இயற்கை அழகு இன்றும் குன்றாமல் இருப்பது இன்பம் தருகிறது. (ஐங் : உரை : 393)

தமிழ் மரபுகளைத் தமிழர் பல நூற்றாண்டுகளாக மறந்து விட்டனர். தமிழ் மரபு என்றாலே எள்ளி நகைக்கும் இழிதகைமையுடையோர் தம்மைப் பரந்த நோக்கினர் என்றும் கூறிச் செருக்கும் காலம் அன்றோ இது ! ஒரு பரத்தை தனக்குப் பரந்த மனம் உள்ளது எனக் கூறுவதைப் போன்றதே இனையர் கூற்றுமாகும்.

பிறநாகரிகக் கலப்பால் பழந்தமிழ் மரபு என்னவென அறிதற்கியலா நிலையை இந்நாள் சான்றோர்கள் தாம் விளக்கம் கண்டு உணர்த்தி வருகின்றனர். அந்நெறியில் ஔவையவர்கள் அருந்தொண்டாற்றியுள்ளனர். சேரமன்னர் தம் மரபு குறித்தும் தமிழக

www.thamizham.net - Free E book No 7510

மரபு நிலை ஒன்று குறித்தும் உரைவேந்தர் உணர்த்தும் அருங்குறிப்பு இஃதாகும்:

"சேர நாடு, குட்ட நாடு, குடநாடு பொறைநாடு எனப் பல நாடுகளாகப் பிரிந்து தனித்தனியே சேரர் குடியில் தோன்றிய அரசர்களால் ஆட்சி செய்யப்படினும், அவருள் வழிமுறைத் தோற்றத்தால் உரியவன் முடிவேந்தனாக, ஏனையோர் அவன் வழியரசாய் ஆட்சி புரிவர்; குட்டுவன் முடிவேந்தனாயின், குடக்கோவும், இரும்பொறையும் வழியரசராவர்; குடக்கோ முடிக்குரியனாயின் குட்டுவர் கோவும் பொறையர் கோவும் வழியரசராவர். தந்தைக்குப்பின் அவர் முதன்மகன், அவற்குப்பின் அவன் முதன் மகன் அரசுக்குரியனாக வரும் முறை (**Primo-geniture**) தமிழர் அரசு முறையன்று; அது வடவர் அரசு முறை. இம்முறை தெரியாமல் தென்னாட்டு வரலாறு காண்போர் பலர் தடுமாறுகின்றனர். (ஐங் : உரை : 408)

ஆங்கில மொழியில் வெளிவரும் தமிழ், தமிழகம் பற்றிய நூல்களில் தவறான செய்திகள் பல வெளியாகின்றன. இதனைக் கண்டும் அறிஞர் சிலர் நமக்கென்னவென ஒதுங்கி விடுவர்; நற்பெயர் எடுக்க; அல்லது தன்னலங்கருதி!

ஔவையவர்கள் உண்மை ஆய்வு ஒன்றே நோக்கமாகவுடையராதலின், இனைய பிழைகளைக் காணுந்தோறும் கண்டிக்கவோ, மறுக்கவோ பின் வாங்கியதில்லை.

"பழந்தமிழ் இலக்கியங்களும் கல்வெட்டுகளும் போதிய அளவு கிடைப்பதற்கு முன் நம் நாட்டின் வரலாறு எழுதிய ஆங்கிலப் புலவர், கேட்போர் நகைக்கும் முறையில் செய்திகள் சில குறித்துள்ளனர். பாண்டி நாட்டு வேந்தர்கள் தொடக்கத்தில் கொற்கையையே தலைநகராகக் கொண்டிருந்தனரென்றும், பின்பே மதுரை அவர்கட்குத் தலைநகராயிற்றென்றும் அவர்கள் குறித்துள்ளனர். (இவ்வாறு எழுதியவர் வின்செண்டு சுமித்து ஆவார். **Early History of India** ப : 468. மற்றும் **History of the Tamils** ப : 242 என்னும் ஐயங்கார் நூலிலும் இத்தகு குறிப்புகள் உள.) நல்ல காலமாக இது போன்ற செய்திகள் பல ஆங்கிலத்திலேயே இருந்து போயின. தமிழில் எழுதியிருந்தால் இளஞ்சிறுவர் பலரும் அக் கூற்றை எள்ளி நகையாடியிருப்பர்." (ப : 428)

ஔவை துரைசாமியாரின் ஆராய்ச்சி வளமையை விரிப்பிற் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்.

"உடலோடு கூடிய உயிர்க்கு அன்பும் அருளும் போல, பொருளோடு கூடிய பாட்டுக்கு இசையும் கூத்தும் சிறந்தனவாகும். கண்ணுக்குக் கண்ணோட்டம் போலப் பாட்டுக்குப் பண் இன்றியமையாதது என்பர் திருவள்ளுவர்" என உரைவேந்தர் முத்தமிழ் அமைம பொருமையை நயமாகப் புலப்படுத்துவார்.

www.thamizham.net - Free E book No 7510

உரைவேந்தரின் அருட்பா உரையும், ஊர்ப் பெயர் வரலாற்று நூலும் உடன் வெளிவர அரசும் பல்கலைக் கழகங்களும் தமிழரும் முயறல் வேண்டும். அதுவே அச்சான்றோர்க் காற்றும் நன்றிக் கடனாகும். வாய்முழக்கம் மட்டும் தமிழை வாழ்த்தப் போதாது. தமிழறிஞரை மதித்துப் போற்றிப் புரத்தலும், அன்னார் நன்னூல்களை மக்களிடை அச்சிட்டுப் பரப்புதலும் வேண்டும். இவரனைய தமிழ்ப் பேரறிஞர்களை மக்கள் தாமாகப் புரிந்து கொண்டு போற்றுவதில்லை; இத்தகையோர் அறிவைப் பயன் கொள்ளுவதுமில்லை. தமிழரின் கடையறிவை என்னென்பேன்!

ஒளவை துரைசாமியாரை மதுரைப் பல்கலைக்கழகம் 'பேரவைச் செம்மல்' எனச் சிறப்பளித்துச் சிறுதொகையளித்தது நனி முதுமையில்! அண்மையில் உலகத் தமிழாய்வு மாநாட்டில் ஒளவையவர்களைத் தக்கவகையில் பாராட்டினர். இத்தகு பாராட்டுகளைவிட, இவ்வறிஞர்களின் ஆய்வு நூல்களை அரசே வெளியிட்டுதவினால் பயனாகும். அறிஞர்க்கும் ஆக்க ஊக்கம் உயரும். அந் நூலால் நாட்டுக்கும் அறிவு வளம் ஓங்கும். காக்கைப் பிடிக்கும் கற்றார் சிலர்க்கே அரசின் உதவிகளும் அணைப்பும் கிடைக்குமானால், உலகம் உள்ளவரை தமிழினம் உருப்படவே உருப்படாது. கறவை மாட்டுக்கு ஊட்டவுணவளித்துப் போற்றி வளர்ப்பது ஊதியமாகும். மலட்டுக் கிழ மாட்டுக்குச் சீருஞ்சிறப்புமாக விருந்தூட்டி மகிழ்வது அறியாமையொன்றே இகழ்ச்சிக்கும் உரியதாகும். தமிழர் தவப்பயனாய் வாய்க்கும் தமிழறிஞர்களைப் போற்றவும் காப்பாற்றவும் பாராட்டவும் சீராட்டவும் தமிழர் கற்றல் வேண்டும். தமிழ்ச் செல்வர் தமிழறிஞரைப் புரத்தலோடு, அன்னார் நூல்கள் வெளிவரவும் உதவுவது தலையாய கடமையாகும். ஆரவாரப் பணிகளினால் அன்னைத் தமிழக்கு ஆக்கம் ஆவதுண்டோ? ஆக்கப்பணியே தமிழுக்கு உயிரும் வளமும் வழங்கும். உரைவேந்தர் வழியில் தமிழறிஞர் உரைக்கலை வளர்க்க எழுச்சி பெறுதல் வேண்டும். வாழ்க உரைவேந்தர் புகழ்!

---

## 'சாதி' அணிகளில் திருக்குறள் அறிஞர்கள்!

திருக்குறள் பரப்புவதையே தங்கள் வாழ்க்கை நோக்கமாகக் கொண்ட, திருக்குறள் கற்ற அறிஞர்கள் ஓரிருவர் அண்மையில் ஆங்காங்கே நடைபெற்றுவரும் சாதி மாநாடுகளில் கலந்து கொள்வது பற்றி அறிய மிகவும் வருந்துகிறோம். புறத்தே ஒருருவமாகவும் அகத்தே வேறு உணர்வினராகவும் உள்ள அவ்வறிஞர்கள் தங்களை அச் சாதிச் சகதியினின்று மீட்டெடுத்துக் கொள்ளவில்லையானால் அவர்களைப் பற்றிய கண்டனக் கட்டுரைகள் தென்மொழியில் வரும் என்று எச்சரிக்கின்றோம்! அவர்களின் சாதி வெறி ஒழிக!

**பொறுப்பாசிரியர்.**

---

www.thamizham.net - Free E book No 7510

# புதிய இதழ்-ஒரு கண்ணோட்டம்

ப. பாவண்ணன், அறி. இ.

விலை மதிப்பற்ற கண்ணாடி நிலைப்பேழை ஒன்றைக் கடையில் இருந்து வாங்கி மிகப் பாதுகாப்போடு வீட்டுக்குக் கொணர்ந்து அறைக்குள் வைக்கப் போகும் நேரம் நிலைப்படியில் இடிபட்டுச் சுக்கு நூறாக உடையும் போது மனம் எந்த அளவுக்குப் புண்படுமோ, அந்த அளவுக்கு ஆயிரக்கணக்கிலே பணத்தை அள்ளிக்கொட்டி நல்ல நோக்கங்களுக்காகவும், நல்லுணர்வையும் நல்லொழுங்கையும் ஏற்படுத்தவும், நல்ல கொள்கைகளை வெளிப்படுத்தவும் ஏதுவாக இருக்கும் இதழ் நடத்தும் முறைகளை, வெற்றுப் போலி உணர்வுகளை உண்டாக்க, வெறும் ஆர்வத்தை மட்டுமே நிலைக்களனாகக் கொண்டு சிலர் "நானும் கச்சேரிக்குப் போகிறேன்" என்ற கணக்காய் இதழ் தொடங்க முனைவதைக் காணும் போது ஏற்படுகிறது.

கலை, கலைக்காகவே மட்டும் அன்று; மக்களுக்கு அது வெறும் மகிழ்ச்சிப் பொருள் மட்டும் அன்று. கலை, மக்களின் எண்ணங்களைச் சீர்மைப் படுத்துகிறது; உணர்வுகளை ஆழப்படுத்துகிறது; செயற்றிறத்தில் நுண்மை ஏற்படுத்துகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கையைப் புரிந்து கொள்ளவும், தன்னொழுங்கோடும், தன்னல மற்ற தன்மையோடும் வாழ்க்கையை அணுகும் முறையைக் கற்பிக்கவும் மக்களுக்கு உற்ற துணையாக இருக்கிறது. இப்படி, வாழ்க்கைக்கு எஞ்ஞான்றும் உற்ற நற்றுணையாய் இருப்பதுதான் கலையே தவிர, வெற்று ஆரவாரங்களால் எழுப்பி அடங்கிப் போகும் இன்பக் கூத்தாட்டம் அன்று.

இத்தகு கலை நுணுக்கங்கள் மக்களிடையே பெரும் தாக்கங்களை விளைக்கின்றன. இத்தகு மன அதிர்வுகளே, அவர்களைப் பெரும் படைப்பாளர்களாகவோ, அறிஞர்களாகவோ, செயல்வீரர்களாகவோ ஆக்குகிறது. வாழ்க்கையைப் பற்றிய புதுத்தெளிவைத் தந்து திடப்படுத்துகிறது; புதிய அணுகுமுறைகளை வகுத்துத் தருகிறது; சிக்கல்களை மிக எளிதாகத் தீர்த்து மகிழ்ச்சியோடும், அன்போடும், ஒப்புரவுத் தன்மையோடும் ஒருவரின் தனித்தன்மை (speciality) யை ஒருவர் போற்றவும் ஒருவர் தீமையை ஒருவர் எடுத்துக் கூறிக் களைந்து கொள்ளவும் உதவுகிறது. இத்தகு நல்ல அதிர்வுகளை மக்களிடையே ஏற்படுத்தும் வண்ணம் கலை. பற்பல உருவங்களில் அறிமுகப் படுத்தப் பெறுகிறது. சிற்பக்கலை இசைக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை, புகைப்படக்கலை, போன்று பற்பல துறைகளாகக் கலை பிரிந்து இயங்குதல் போல், வளர்ந்துள்ள அறிவியல் முறைகளில் அச்சுப்பொறி கண்டுபிடிக்கப்பட்டதன்பின் 'இதழ்கள்' (Magazines) கூட கலையின் இயக்கமாக மாறியது.

மாபெரும் கடமையுணர்வும், பொறுப்புணர்வும் கொண்ட 'இதழ்கள்' மிகுந்த கவனத்தோடும், எச்சரிக்கையுணர்வோடும், தன்னுணர்வோடும் செயற்பட வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்.

www.thamizham.net - Free E book No 7510

ஆனால், தற்போது, நம் தமிழகத்தில் காணும் நிலைமை என்ன? மாதத்திற்கு மாதம் பற்பல எழுத்தாளர்களால் பற்பல இதழ்கள் புற்றீசல்கள் போல அறிமுகப்படுத்தப் பெறுகின்றன. ஆனால் அவற்றில் ஒன்றேனும் உருப்படியான உருவைத்தோடு இருக்கிறதா என்று கேட்டால், அதுதான் இல்லை.

அண்மையில் திருவாளர். மணியன் அவர்களால் 'இளைஞர்களுக்காக' - என்ற விளம்பரத்தோலைப் போர்த்திக் கொண்டு 'மயன்' என்றோர் இதழ் தோற்றுவிக்கப் பெற்றிருக்கிறது. அதன் முதல் இதழைத் தற்செயலாக நூல்நிலையத்தில் பார்க்க நேர்ந்தது. அதன் அட்டைப் படத்தைப் பார்த்ததுமே எரிச்சல் எரிச்சலாகத்தான் வந்தது.

ஒரு மகிழுந்தின்மேல் நான்கைந்து இளைஞர்களும், இளம் பெண்களும் பகட்டான உடையணிந்து எதற்குமே கவலையின்றிக் கும்மாளம் போட்டபடி இருக்கும் படம் போடப்பட்டு இருந்தது. அதற்குப் பக்கத்திலேயே ஆணும், பெண்ணும் கை கோர்த்த வண்ணம் கடற்கரையில் ஓடும் அருவருப்பான படமும் வெளியிடப்பட்டு இருந்தது. இவை மட்டுமல்ல, இன்னும் இந்த உலகத்தைப் பாழ்படுத்துவதற்காக எப்படிப்பட்ட படங்களையெல்லாம் எடுத்துப் போட எண்ணுகிறாரோ, அப்படியெல்லாம் போட்டுப் பார்த்துத் திருவாளர். மணியனார் மகிழ்ந்து கொள்ளட்டும். அதைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. காரணம் என்னவெனில், அவர் ஏற்கனவே இதழ் உலகத்தை எந்த அளவு கீழிறக்க முடியுமோ, அந்த அளவுக்குக் கீழிறக்கும் நோக்கத்துடன் வளரும் தலைமுறையினருக்கு 'இளமை, இனிமை, புதுமை' - என்ற பெயரில் காய்டிக்கும் பணியை ஏலமிட்டு எடுத்துக் கொண்டவர். ஆனால் நம்மை இந்த அளவுக்கு வரிந்து கட்டிக் கொண்டு எழுதச் செய்ததெல்லாம், மேற்சொன்ன படங்களுக்குத் தலைப்பாக நம் பாவேந்தரின் படைப்புத் திறம் மிக்கவரியான 'புதியதோர் உலகம் செய்வோம்' என்பது எழுதப்பட்டு இருப்பதுதான். புதியதோர் உலகம் எது?

எளிமைப் பண்பும், இரக்கக் குணமும் மனத்தில் நிரம்பி நிற்க, ஒருவன் பொருளை மற்றொருவன் சுரண்டாவண்ணம், ஒருவன் உழைப்பால் மற்றொருவன் உயரா வண்ணம் உழைப்பையும், உடைமையையும் பொதுமைப் படுத்தி, அதன்வழி மகிழ்ச்சியையும் பொதுவாக்கிக் காண்பதுதான் புதியதோர் உலகம் ஆகும். அப்பனோ, பாட்டனோ சம்பாரித்த சொத்திலே கல்வி நலனிலும், அறிவு நலனிலும் அக்கறையின்றி மகிழுந்தேறிக் கொண்டு மருந்துகளால் நறுமணம் பரப்பும் ஆடைகளைப் புனைந்து மயக்கும் மங்கையர் கூட்டம் துணைக்கு வர, ஆடலும், பாடலும், கேளிக்கையுமாகக் கூத்தாடித் திரிவது புதியதோர் உலகம் அன்று. அப் புதியதோர் உலகை உருவாக்குபவர்கள் யார்?

www.thamizham.net - Free E book No 7510

அறிவு முதிர்ச்சியையும், வாழ்க்கைத் தெளிவையும் எண்ணி அறிந்து, கூர்மையாய்ப் பார்த்துத் தெரிந்து பட்டறிவுகளால் நுகர்ந்து வினைபுரியும் இளைஞர்களின் கையில்தான் புதியதோர் உலகை ஆக்கும் பணி ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. ஏனெனில் வாழ்ந்து, ஓய்ந்து, பார்த்துச் சுவைக்க மட்டுமே இயன்ற முந்தைய தலைமுறையினரோ, பிறந்து வளர்ந்து முதிர்ச்சியின்றி நிற்கும் சின்னத் தலைமுறையினரோ அன்றி, வாழ்க்கைச் சிக்கல்களில் எல்லாப் பிடிகளிலும் சிக்கித் தவித்துத் தம் அணுகுமுறையாலும் செயல் திறனாலும் வெளிப்பட்டு வெளியுலகை வெற்றி கண்டு புரட்சியை மலர்த்தும் இளந்தலைமுறையினரே அப்பணியைச் செய்ய இயலும். அந்த இளைஞர்கள் யார்?

வீட்டுப் பொறுப்புகளையும், கல்லூரிப் பட்டங்களையும் ஒரு சேரத் தலையிலே தாங்கிக் கொண்டு நற்சான்றிதழ்களை யெல்லாம் தொகுத்துக் கோப்புகளில் மாட்டிக் கொண்டு 'இராச் சோற்றுக்காரன்' போல அலுவலக அலுவலகங்களாக, ஆலை ஆலைகளாக, கடை கடைகளாக ஏறி இறங்கி 'வேலை இல்லை' என்ற அறிவிப்போடு அயர்ந்து வெறுப்புற்று வருகிறார்களே, அவர்கள்தாம் இக்கால இளைஞர்கள்; படிப்புத் தகுதியையும் பயிற்சித் தகுதியையும், இன்னும் என்னென்ன கூடுதல் தகுதிகள் உண்டோ அவை அனைத்தையும் வேலைப் பதிவகங்களில் பதிந்து விட்டு, 'இன்று வரும், நாளை வரும்' என்று ஏழெட்டு ஆண்டுகளாக ஒரு நேர்முகத் தேர்வாணையாவது வாராதா என்று நாளும் அஞ்சல்காரனைப் பார்த்தவண்ணம் ஏங்கி இருக்கிறார்களே, அவர்கள்தாம் இக்கால இளைஞர்கள்; தம் தகுதிக்கும், திறமைக்கும் கிடைக்க வேண்டிய பணிகள் சிற்சில பரிந்துரைகளாலும், மேற்குறுக்கீடுகளாலும் பறிக்கப்படுவது கண்டு நெஞ்சம் கொதிப்புற்றுச் செய்வதறியாது திகைத்து நிற்கிறார்களே, அவர்கள்தாம் இக்கால இளைஞர்கள்; வேலைகளுக்கான விளம்பரத் துணுக்குகளைத் தேடித் தேடிக் கூர்ந்து பார்த்து முன்பயிற்சி (Experience) இல்லாததால் தொய்ந்து சோர்ந்து போய் இருக்கிறார்களே, அவர்கள்தாம் இக்கால இளைஞர்கள்; சுரண்டும் அரசியலாரும், முதலாளிமார்களும் ஒருபுறம் இருக்க, மற்றொரு பக்கத்தில் நுழைவுத் தேர்வுக்கே (Entrance Exam) 30 உருபா, 40 உருபா என அஞ்சல் ஆணைகள் கேட்கும் பெரிய நிறுவனங்களுக்கு அக்காள் நகையையும், தங்கை வளையலையும் அடகு வைத்துப் பணம் பெற்று எழுதி ஏமாறுகிறார்களே, அவர்கள்தாம் இக்கால இளைஞர்கள்; செய்யப் போகும் தேர்வுக்குச் சற்றும் பொருத்தமின்றி கேட்கப்படும் 'நார்வேயின் தலைநகர் எது? உலகின் ஆழமான கடல் எது? பைசா கோபுரம் எங்குள்ளது?' என்பன போன்ற போலித் தனமான வினா-விடை முறைகளுக்கேற்றவாறு தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளிலேயே தம் திறமையை அழிக்கிறார்களே, அவர்கள்தாம் இக்கால இளைஞர்கள்.

www.thamizham.net - Free E book No 7510

இப்படி, எல்லா நிலைகளிலும் தாழ்ச்சியுற்று, மனமுடைந்து, வெறுப்பால் உள்ளங்குலைந்து, உறுதி தளர்ந்து வறட்சியான எண்ணங்களோடு வாழ்கின்றவர்களாக இளைஞர் கூட்டம் இருக்கும் போது ஆரவாரமான ஆடைகளை அணிந்து கொண்டு ஆணும் பெண்ணும் கை கோத்துக் கொண்டு நடப்பதாக மணியன் காட்டுவது எவ்வளவு பெரிய போலித்தனம்? இதைப் போலித்தனம் என்பதை விட ஏமாற்றுத்தனம் என்பதே பொருந்தும். இயற்கை நிலையை உணர்த்தாதது மட்டுமன்றி இருப்பதை மறைப்பது மிகப் பெரிய குற்றம் அல்லவா?

எண்ணத்தால் வறண்ட இளைஞர்களுக்குத் தென்பூட்டி, நம்பிக்கையேற்றி, எழுச்சியுண்டாக்கி அணி திரட்டிச் செயல் திறன் மிக்கவர்களாய் ஆக்குவதற்குக் கலையை எப்படி யெல்லாம் பயன்படுத்த முடியுமோ (நல்ல நெறிகளில்) அப்படிப் பயன்படுத்தி, ஆக்க நிலையில் நன்மைகள் தேடித்தரின், அப்போது உருவாகும் இளைஞர்கள் தாம் புதியதோர் உலகம் அமைப்பவர்கள். புதியதோர் உலகமும் அப்போது தான் பிறக்கும்.

அதைவிட்டுக் காசுக்காக மானத்தை விற்கும் பரத்தைப் பெண் போல, 'காசு' ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இளைஞர்களின் திறனை - உழைப்பை - நம்பிக்கையை - எண்ணங்களைச் சுரண்டும் வண்ணம் மணியன் ஏன் இதழ் நடத்த வேண்டும்?

பரத்தைத்தனம் பண்ணுகிறேன் என்று முழுமனத்தோடு ஒத்துக் கொண்டு உடன்படும் பெண்ணையாவது சற்று மன்னிக்கலாம். ஆனால், எதையெதையோ குறிக்கோளாகப் போட்டு விட்டு எப்படி எப்படி யெல்லாமோ பணம் சம்பாதிக்கும் மணியத்தனத்தை எப்படி மன்னிப்பது?

'சிக்கல் தீர வழி', 'நம்பிக்கை பெறுங்கள்' என்று திரு. உதய மூர்த்தியாரைக் கொண்டு இரு பக்கங்களிலும் மனவியலை ஒட்டிக் கட்டுரையை வெளியிடுவதால் ஒரு பங்கு நம்பிக்கை உண்டாயிற்று என்று பேச்சுக்கே ஒத்துக் கொண்டாலும், ஏற்கனவே இளைஞர்கள் மனத்தில் திரண்டிருந்த துணிச்சலில் - நம்பிக்கையில் - ஒன்பது பங்கை இழக்கச் செய்யும் வகையில் கழிகாமக் கதைகளையும், இழி சுவைத் துணுக்குகளையும் அரைகுறை அம்மணப் படங்களையும், "அரிதாரம்" பூசியவர்களின் நேருரையையும் மற்ற நாற்பத்தாறு பக்கங்களிலும் போட்டு நிரப்பிப் பணம் ஈட்டும் மணியத்தனத்தை எப்படிப் பொறுப்பது?

நான்குவரித் துணுக்குகளைக் கூடப் பாலுணர்வைத் தொடாமல் படைக்கக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு இளைஞர்களைப் பாழடிக்க முனையும் மணியனை எப்படித் தாங்கிக் கொள்வது? சேச்சே?

www.thamizham.net - Free E book No 7510

ஒருவன் பெண்டாட்டியை மற்றொருவன் இழுத்துச் செல்லும் அல்லது ஒருத்தியின் கணவனுடன் இன்னொருத்தி இன்பங் காணும் கதைகளை மிக அழகான வண்ணப் படங்களுடன் அருமையான வழங்குதிறத்தோடு (Presentation) எழுதி வெளியிடும் செயலொன்றையே 'இனிமை' என்றும், நல்ல நெறிகளையூட்டும் வாழ்க்கைப் படங்களைப் பிடித்துக் காட்டும் படைப்புகளை வெளியிடுதல் இனிமை அல்லவென்றும், 'இந்த நடிகை இன்னொருடன் பேசிக் குலாவினாள்; 'இந்த நடிகர் பிறமொழியின் உச்சியில் இருக்கும் இன்னொரு நடிகையை இரண்டாம் முறையாய் மணந்தார்' என்பன போன்ற செய்தியை வெளிப்படையாகக்கூட வெளியிடாமல் கிளர்ச்சிதரும் வகையில் தந்திரமாக 'கிசுகிசு' பகுதிகளை வெளியிடுவதையே 'இளமை' யென்றும், இளைஞர் ஆற்றலை ஒருமுகமாகக் குவிக்க, இலெனின், கார்க்கி, இலிங்கன் போன்றோர்க்கிருந்த இளமை ஊக்கத்தைத் தருதல் இளமையன்றென்றும், அட்டைப் படத்திலும், நடுப்பக்கத்திலும் பெண்ணுடம்பை வெளிச்சம் போட்டுக் காட்டி விடாய் ஏற்படுத்தும் தன்மையையே 'புதுமை' யென்றும், சிக்கல்களுக்குப் புது அணுகுமுறைகளைத் தெரிவித்தும், துன்பங்களைப் புறக்கணித்து முயற்சியில் முனையும் ஆற்றலை வளர்த்திட உதவும் படைப்புகளை வெளியிடல் புதுமை அன்று என்றும் நம்பும் மணியன் என்றுதான் திருந்துவாரோ? 'இதழ்' உலகம் என்றுதான் உருப்படுமோ?

**தென்மொழி, செம்மலர், தாமரை** போன்ற தகுதியான, கொள்கை விளக்கமுள்ள இதழ்கள் இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்டிக் கொண்டு வரும் இக்கால், இதுபோன்ற புதுப்புது இதழ்களை அறிமுகப் படுத்தி அறிவைத் தூர்க்கும் தன்மையை அனைவரும் உணர்ந்து எச்சரிக்கை பெறுவார்களாக!

"இளைதாக முள்மரம் கொல்க ; களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து"

"செய்தக்க அல்ல செயக்கெடும் ; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

## சிங்கை, மலேசியத் தென்மொழி விற்பனையாளர்.

சிங்கை, மலேசியத் தென்மொழி முகவராக உள்ள தமிழன்பர் முகவரி கீழே தரப்பெறுகிறது. அந்நாடுகளில் உள்ள அன்பர்களும் தென்மொழி ஆர்வலர்களும் தென்மொழி, தமிழ்ச்சிட்டுகளைத் தொடர்ந்து பெற, அவருடன் தொடர்பு கொள்வார்களாக.

IRAIVANAN,
TANJONG PAGAR
P. O. BOX. No. 633
SINGAPORE - 9108.

www.thamizham.net - Free E book No 7510

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் கிழமை, மாத இதழ்களில் ஆங்கிலச் சொற்களை மட்டுமல்ல; எழுத்துகளையே அச்சடிக்கின்றனர். அதைக் கண்டிப்பார் இல்லை. இன்னும் பல துறைகளில் தமிழ் வளரவில்லை.

**ஆகவே, தமிழர்களே !**

தமிழ்நாட்டில் எங்கும், எதிலும் தமிழ் வளரத் துணைபுரிவீர்கள்! மாநில அரசுக்கோ, மாநகராட்சிக்கோ தமிழிலேயே கடிதம் எழுதுங்கள் !

பிள்ளைகளைத் தமிழ்ப் பயிற்சிமொழி வகுப்பிலேயே சேருங்கள் ! அறமன்ற, ஆட்சி மொழியாகத் தமிழ்வளரத் துணைபுரிவீர்கள் ! கோவில்களில், திருமணம் போன்ற சடங்குகளில் தமிழையே பயன்படுத்துங்கள்.

அனைத்துத் துறையிலும் தமிழ் வளரத் துணைபுரியுங்கள்.

## தமிழருக்கு வேண்டுகோள்

0 'வாழிய செந்தமிழ்' என்றே நாம் வாயால் சொல்லிப் பயனில்லை; எழுத்திலும், பேச்சிலும் தமிழுக்குச் சிறப்பிடம் கொடுப்பீர் தமிழர்களே !

0 பரங்கிமொழிப் பயிற்சியிலே பச்சிளம் பாலனும் படித்தானுனல் பைந்தமிழ் பாசித்தமிழாகி, அறிவும் மழுங்கிப்போய்விடுமே !

0 ஆங்கிலப் பாசம் அழியாவிட்டால் அருமைத் தமிழ் அழிந்தே போகும்.

0 அனைத்தும் அறிந்த ஆண்டவனுக்கு அருந்தமிழ்மட்டும் புரியாதோ ?

0 உலகத் தமிழ் என்றுரைப்போரே உள்ளூர்க் கோயிலில் தமிழ் எங்கே?

0 இத்தாலியில் இருந்து வந்த வீரமாமுனிவர் கூட,
இன்பத் தமிழ் என்று சொல்லி இறுமாந்து நிமிர்ந்து நின்றார் ;
இங்குள்ள அன்பர்களோ ஆங்கிலத்தில் 'கிருஸ்மஸ் வாழ்த்து'
அறியாமல் அனுப்புகிறார்கள் ; ஆண்டவரே மன்னிப்பீராக !

0 வளைவுகளை வைத்துவிட்டு வண்ண ஊர்வலம் சுற்றிவந்து
தமிழைத் தவிர பிறமொழிக்கு வாழ்வில் இடமே கொடுத்தீரானல்
'வாழ்க தமிழ்' என வாழ்த்திப் பயனில்லை; மாநாடு நடத்தியும்
பயனில்லையே !

0 ஆகையினுலே இன்றுமுதல் அருமைத் தமிழை எங்கணுமே ஏற்றிப் போற்றிப் புகழ்ந்திடுவீர்! உலகம் போற்ற வாழ்ந்திடுவீர்!!

**நன்னெறிக் கழகம்,** மதுரை.

www.thamizham.net - Free E book No 7510

தான் விரும்புகின்றனர்; எனவே அவற்றைத் தருகிறோம்' என்பதே. ஆனால் நன்கு அறிவியலோடு தமிழும் படித்தறிந்த என்னையொத்த ஏராளமான மாணவர்கள், எல்லாத் தமிழ் ஏடுகளும் மேலும் தரங் குன்றந்து தமிழையும் தமிழனையும் மிகவும் மலிவாக்கி விட்டனவே என் எண்ணி வருத்தமுறுகின்றனர். வெளிநாட்டவரிடத்தும், மாநிலத்தாரிடத்தும் சிறந்த ஏடு, நிறையச் செய்திகள், புதுக்கருத்-துகளை நற்றமிழில் தரும் ஏடு என விரல்விட்டுக் கூட எண்ணத் தேவையற்ற வறுமைத் தோற்றத்தைக் காட்டவேண்டியுள்ளது. 'கலைக்கதிரை' விட்டால் அறிவியலுக்கென வேறு தமிழ் ஏடே இல்லை எனலாம். எழுதத் திறன் இருந்தும் ஏற்றுக் கொள்ள அல்லது வெளியிடத்தகுதி பெற்ற நல்லேடுகள் இல்லை என எண்ணுவோரைக் காண்கிறோம். இந்நிலையிலும் புலைத் தொழிலும் புன்தொழிலும் புரிந்து வாழும் பல எழுத்தாளர்களையும், ஏட்டாசிரியர்களையும் எண்ணி எவ்வகைப் பயனுமில்லை, தமிழும், தமிழனும் முன்னேற அவனுக்குப் பொது, அறிவியல் அறிவு வளரவேண்டும். பின்னரே அவன் தன்மானத்தைப் பற்றிச் சிந்திப்பான். அந்நிலை வரச் சிறந்த அறிவியல் ஏடுகள் பல மலர்ந்து மணம் வீச வேண்டும். சேற்றிலே புரண்ட தமிழனுக்கு ஆற்று வெள்ளம் தான் வேண்டும் அவனது அழுக்ககற்ற. தென்மொழி, தமிழ்ச்சிட்டு இவற்றின் வளர்ச்சியாக புதிய ஏடு ஒன்று அறிவியலும், குமுகாய நலன் உயர்த்தும் புதுமைச் செய்திகளும் நிறைந்து மலர்வது இயலுமா என்பதைத் தாங்கள் ஆராய வேண்டுகிறேன். அன்புடன் — **ஆ. ஆறுச்சாமி, சென்னை-36.**

**0 : 843 :** தனித்தமிழ்க் காவலர் ஐயா, அவர்கட்கு வணக்கம்! நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாடுகள் எல்லாம் எந்த அளவில் உண்மைத் தமிழ் அறிஞர்களை புறக்கணித்துள்ளன என்பதைத் தென்மொழி வாயிலாக அறிந்தபொழுது; நெஞ்சம் துடிதுடித்து விட்டது! ஏழ்மையும் அறியாமையும் ஒழியவேண்டி எவனாவது பாடுபட்டானா? தூங்கினவன் தொடையில் திரித்தமட்டும் ஊதியம் என்பது போல, அல்லும் பகலும் அயராது சுருட்டுகிறார்கள். இனம்; மொழி; நாடு என்பவற்றின் மீது இவர்களுக்குப் பற்று எங்கே இருக்கும்! அவர்களெப்படி தமிழ் அறிஞர்களைப் போற்றுவார்கள்?

— **மு. செகந்நாதன்,** திருவண்ணாமலை.

**0 : 844 :** பாவலரேறு ஐயா, வணக்கம். 'திராவிடம்' என்னும் சொல்லையே தன் கட்சிப் பெயரில் வைத்திருக்கும் ஒரு கட்சி (அ. இ. அ. தி. மு. க.) நடத்திய ஐந்தாம் உலகத் தமிழ்மாநாட்டில், தங்களைப் போலும், தமிழ்மொழி, இன நாட்டிற்காக வாழ்க்கையையே ஈகம் செய்யும் பேரறிஞர்களுக்கு இடமில்லை யென்றால் இந்தத் துயரத்தை யாரிடம் போய்ச் சொல்வது? 'பார்ப்பானை மட்டுமே குறை கூறிப் பயனில்லை; நம்மவர்களே நம்மின ஆக்கத்திற்குத் தடையாக இருக்-கிறார்கள்' என்று தாங்கள் முன்பு ஓர் ஆசிரிய வுரையில் எழுதியது நினைவுக்கு வருகிறது. தமிழர்கள் தன்மான உணர்ச்சி பெறுவது எப்போது?

— **மணிவேலன், குறிஞ்சிப்பாடி.**

**0 : 845 :** மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் மறைவுத் துயரைத் தமிழ் கூறும் நல்லுலகு ஆற்றுவதற்கு முன்பே, உரை வேந்தர் ஒளவை துரைசாமி அவர்களையும் இயற்கை நம்மை விட்டுப் பிரித்து விட்டது. 78 அகவையான துரைசாமி அவர்கள் சிவனியத் தமிழ்ப்பழம். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசு அவருக்குப் பணமுடிப்பு வழங்கிச் சிறப்புச் செய்தது. கழக இலக்கி

www.thamizham.net - Free E book No 7510

யங்களுக்கு அவர் எழுதிய உரையை மறத்தல் அரிது. புலவர் வரலாறும், ஊர்களின் வரலாறும், வள்ளல்கள் வரலாறும் எழுதிச் சொற்பொருள், விளக்கவுரை எழுதும் வழக்கம் உடையவர். ஞானாமிர்தம் என்ற அரிய சிவனிய நூலுக்கும் அவர் உரை எழுதியுள்ளார். கல்வெட்டுத் துறை, கழக இலக்கியம், பழந்தமிழ் இலக்கணம் ஆகிய துறைகளில் ஆழ்ந்த புலமை நிரம்பிய ஔவை துரைசாமி அவர்கள் தமிழக ஊர் ஆராய்ச்சியாக 2000 ஊர்களைப் பற்றி ஆறு தொகுதிகள் எழுதியுள்ளார். அந்நூல் இதுவரை அச்சேறாமல் உள்ளது. தமிழார்வம் மிக்க தமிழக முதல்வர் திரு. ம. கோ. இரா. அந்நூலை வெளியிட ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

— கா. அன்புச்செல்வன், திருப்பராய்த்துறை.

0 : 846 : நெஞ்சம் நிறைந்த பாவலரேறு ஐயா அவர்கட்குப் பணிவு வணக்கங்கள். உலகெலாம் வாழ்கின்ற தமிழர்கள் அனைவர்க்கும் ஒரு பேரறிஞராய்த் தாங்கள் திகழப் போவதின் பேருண்மையின் வழியே இயற்கை தங்களை இப்பொழுது அந்தமான் தமிழர்களிடை அழைத்துச் செல்கின்றது. செலவு சிறப்புறவும் தங்களின் தூய வாலறிவுக் கதிர் செந்தமிழர் உள்ளமெங்கும் பரவிடவும் முழுமுதலை இறைஞ்சுகின்றேன். தங்களின் அன்பு மாணவத்தம்பி.

— கு. இராசேந்திரன், க.மு. அண்ணாமலைநகர்.

0 : 847 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு வணக்கம். தாங்கள் அந்தமான் செல்லவிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி. மொழிஞாயிறு பாவாணரைப் பிரிந்து வாடும் எம் உள்ளத்தின் அவலநிலை சொல்லொணாது எனின், தங்களின் துயர் எண்ணி மிகவும் வருந்துகிறேன். தொய்வடைந்த தங்களின் உள்ளத்திற்கு அந்தமான் தமிழர்தம் அன்புடை விருந்தோம்பல் அருமருந்தாகிடும் என நம்புகிறேன். எந்நிலை வரினும் உங்களின் கொள்கைக்கு என்றும் எம் போன்றோர் அரண் சேர்ப்போம். தங்களின் அந்தமான் செலவு நன்முறையில் அமைந்திட இறைவன் அருள் புரிந்திட வேண்டுகிறேன். அன்புடன்

— மு. பழ. சதாசிவம், சேலம்-6.

0 : 848 : அன்பிற்குரிய ஐயா ! தமிழ்ப் பாவலரே ! உங்கள் அன்பிற்கு என் தலை தாழ்த்தி வணக்கம் கூறுகிறேன். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் நினைவு மலராகத் தென்மொழி வந்ததைக் கண்ணுற்றேன். அம்மலர் எனக்கு மிகவும் இன்றியமையாததாக உள்ளது. என் பள்ளித் தோழர்களுக்கும், பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும். தென்மொழி இதழைக் காண்பித்தேன். பாவாணரின் நிழற் படத்தைப் பார்த்தவர்கள் மெய்மறந்தனர் ; தங்களின் பாடல்களைப் படித்தவர்கள் மெய்சிலிர்த்தனர். வாணியம்பாடியில் பாவாணர் இலக்கியக் கழகம் ஒன்றை நிறுவ ஆயத்தம்செய்துள்ளேன். விரைவில் தொடக்க விழாவைத் தாங்கள் காண ஏற்பாடு செய்கிறேன். பாவாணர் நினைவு மலர் உள்ளத்தைத் தொட்டது. உலகை வென்றது.

— புலவர். மு. கு. தங்கவேலன், க. மு. வாணியம்பாடி.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)

www.thamizham.net - Free E book No 7510